Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 20 புதன்கிழமை (04.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 155

## எல்லை தாண்டிய மீன்பிடியால் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் ஆபத்து!

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் இலங்கைத் தீவில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழான 'சிலோன் ருடே' தனது ஆசிரியர தலையங்கத்தில் எச்சரித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடிச் செயற்பாடுகள் கடற்படையினரின் நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகக் கூறியிருக்கும் அவ் ஊடகம், புதிய அரசாங்கம் இந்த விடயத்தில் மென்போக்கைக் கடைப்பிடிப்பதால் எல்லைதாண்டிய மீன்பிடிச் செயற்பாடு எல்லை மீறிச் சென்றிருப்பதாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

இந்த எல்லைதாண்டிய மீன்பிடிச் செயற்பாடுகளால் வடக்கு மீனவர்களே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், போர்க் காலத்தில் நாட்டில் அதிகளவு பாதிப்புக்களை எதிர்கொண்ட வடக்கு மீனவர்கள், போர் ஓய்ந்த சூழ்நிலையிலும் மீண்டும் தமது தொழில் நடவடிக்கைகளில் சுதந்திரமாக ஈடுபட்டு முன்னேற முடியாமல் இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய

19 ஆம் பக்கம் பார்க்க

## இரகசிய முகாம்கள் எதுவும் இல்லை

### ரணில் திட்டவட்டம்

இரகசிய தடுப்பு முகாம்கள் தொடர்பிலான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் சில பகுதிகளில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரகசிய தடுப்பு முகாம்கள் காணப்படுவதாக அண்மையில் ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறான எந்த விதமான இரகசியத் தடுப்பு முகாம்கள் எதுவும் இயங்கவில்லை என பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது எவ்விதமான இரகசிய தடுப்பு முகாம்களும் இயங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். காணாமல் போனவர்கள் தொடர்பி

19 ஆம் பக்கம் பார்க்க

## தப்பிப் பிழைத்தது கிழக்கு மாகாண ஆட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு கிழக்கு மாகாண அரசாங்கத்தில் இணைந்து கொண்டதையடுத்து, கிழக்கு மாகாண அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுனர் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண அமைச்சர்களாக நான்கு பேர் பதவியேற்றனர்.

இதன்படி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர், தண்டாயுதபாணி, கல்வி அமைச்சராகப் பதவியேற்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்னொரு உறுப்பினரான, துரைராஜசிங்கம், விவசாய, நீர்ப்பாசன அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

சுகாதார அமைச்சராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரும், வீதி அபிவிருத்தி அமைச்சராக ஆரியவதி கலப்பதியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சு மூலமே தீர்வு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மக்களின் நீண்டகால பிரச்சினைகள் அனைத்தையும் மனம் திறந்து பேச்சுக்களை நடாத்துவதன் மூலம் சுமுகமாக தீர்த்துக் கொள்ள முடியும் அத்துடன் வடக்கு, தெற்கு, மக்கள் அனைவரும் இனமத பேதங்களை மறந்து சகோதரத்துவமாக ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்தார்.**

19 ஆம் பக்கம் பார்க்க



## வடக்குக்கு அதிக அதிகாரம் மோடியுடன் பேசுவோம்

### சுமந்திரன் சொல்கிறார்

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடவுள்ளதாக, தமிழ்த தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர் வரும் 13ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, இந்தியப் பிரதமரைச் சந்தித்து, அதிகாரப்பகிர்வு குறித்து கலந்துரையாடவுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியலில் சம உரிமை; அபிவிருத்தியில் சமத்துவம்

### தமிழர்கள் விரும்புவது இதைத்தான்



(யாழ்ப்பாணம்)

வடக்கின் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு வாழவிரும்புகின்றனர். அரசியலில் சம உரிமையும் அபிவிருத்தியில் சமத்துவமும் வேண்டும் இதைத்தான் வடக்கு மக்கள் எதிர்பார்க்கின்றனர். என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் இடம் பெற்ற வடமாகாண ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக வட பகுதி நோக்கி வந்திருக்கும் மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்களையும் வடபகுதி மக்களின் சார்பாக வணக்கம் கூறி நேசக் கரம் நீட்டி வரவேற் கின்றேன்.

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அல்து அமைச்சர்கள்

வடக்கு நோக்கிவரும்போது

20 ஆம் பக்கம் பார்க்க

## எரிகாயங்களுடன் கர்ப்பிணிப்பெண் மீட்பு

வடமராட்சி அல்வாய் முத்துமாரியம்மன் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து எரிந்த நிலையில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் நேற்றுக்காலை மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வதிரியைச் சேர்ந்த பிரதீபன் சரண்யா (வயது 24) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டார்.

இவரது கணவன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருகின்றார். இருவரும் வதிரியிலிருந்து அல்வாய் பகுதியிலுள்ள வீடொன்றில் தங்குவதற்காக கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்றனர்.


இந்நிலையில் பெண் நேற்று எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர்.(18)

## உள்ளக விசாரணை ஐ.நா. ஆதரவு

(கொழும்பு)

யுத்தகாலத்தில் வடக்கில் இடம்பெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் தொடர்பான உள்ளக விசாரணைப்பொறிமுறை ஒன்றுக்கு ஐ.நா. தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் நம்பகரமானதும் சர்வதேச தரத்தில் அமைவதுமான ஒரு உள்நாட்டு யுத்த விசாரணையை ஐக்கிய நாடுகள் ஆதரிக்கும் என்றும் ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகார செயலாளர் ஜெப்ரி பெல்ர்மன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு சற்று முன்னர் கொழும்பில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



புங்குடுதீவு சென்.சேவியர் சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா கலந்துகொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டார்.

# தாதியருக்கான நியமனம்

# ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தாதியருக்கான நியமனம் தொடர்பில் தாதிய மாணவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற வடமாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நிறைவில் ஜனாதிபதி வெளியேறிய வேளை இவ்வாறு தாதிய மாணவர்களால் இம்மகஜர் கையளிக்கப்பட்டது.

தமது நியமனம் தொடர்பில் வர்த்தமானியில் விண்ணப்பம் கோரிய வேளையில் ஆங்கில பரீட்சை முடிவு எதுவும் கோரப்படாத நிலையில் தற்போது இறுதியாண்டு நிறைவேறிய நிலையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கே நியமனக் கடிதம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தமது நியமனம் தொடர்பில் கேள்வில் குறியான நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இரண்டாம் ஆண்டு கற்கும் தாதிய மாண வர்களும் இதனால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர்க ளுக்கான ஆட்சேர்ப்பு வர்த்த மானி அறிவிப்பின் விஞ்ஞான கற்கை நெறி மேற்கொண்ட மாணவர்களின் கல்வித் தகைமையே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், கலை, வர்ததகம் கற்ற மாணவர்கள் விசேட அறிவிப்பின் பிரகாரம் தாதிய சேவைக்கு சேர்த்துக் கொள்ளப் பட்டமையால் இந்த ஆங்கிலக் கல்வித் தகைமை குறித்து எந்த அறிவிப்பும் இல்லை எனவே தற்போது பயிற்சியை நிறைவு செய்யும் தறுவாயில் இவ்வாறு காரணம் காட்டி நியமனம் வழங்குவதை நிறுத்துவதை மீள்பரிசீலனை செய்து தமது நியமனங்களை வழங்குமாறு கோரி இந்த தாதிய மாணவர்கள் நேற்று ஜனாதிபதியிடம் மகஜர் கையளித்துள்ளதாக தெரிவித்தனர்.

இதனால் 300 பேர் வரையில் வடகிழக்கில் பாதிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமறை மன்றம் மாதாந்த பூரணை தினத்தில் நடாத்தி வரும் “அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் யாழ்ப்பாணம் சிவத்தொண்டன் நிலைய ஆதரவுடன் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் யாழ்.சிவத்தொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெறும்.

அடியார்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## பனை உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கத் திட்டம்

### பனை அபிவிருத்திச் சபை தலைவர் தெரிவிப்பு

பனை உற்பத்தி பொருட்களின் விற்பனையை அதிகரித்து பனை உற்பத்தியில் தங்கியுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ள பனை அபிவிருத்திச் சபை தலைவர் கே.விஜிந்தன், நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலத்தில் நிவர்த்தி செய்யப்படாமல் இருந்த வேலைத்திட்டங்களை குறுகிய நாட்களுக்குள் நிவர்த்தி செய்து, உற்பத்திகளை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

சர்வதேச ரீதியில் எமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கும் விமான நிலையத்திலும், சதோச, காகில்ஸ் போன்ற சிறப்பு கடைகளிலும் எமது உற்பத்திகளை சந்தைப் படுத்துவதை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

சுற்றுலா மையங்களை தெரிவு செய்து அங்கு எமது கற்பகம் விற்பனை நிலையத்தை அமைத்து நடமாடும் சேவைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளோம்.

பனை அழிவை தடை செய்வதற்கு புதிய சட்ட ஏற்பாடு ஒன்று உருவாக்கி செயற்படுத் துவதற்கு எமது உறுப்பினர் களால் கலந்தாலோசிக்கப்பட் டுள்ளது. வெகுவிரைவில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

கடந்த காலங்களில் கைப்பணி பயிற்சிகளை மேற்கொள்பவர்களின் இடைவிலகல் அதிகமாகி உள்ளது. அவ்வாறான இடைவிலகலை தடுப்பதற்கு பயிலுநர்களுக்கு உதவு தொகைகள் கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

கீழ்மட்ட பணியாளர்களிடம் இருந்து கருத்துக்களை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். எந்த வகையில் உற்பத்திகளை அதிகரிக்க முடியுமோ, அந்த வகையில் உற்பத்திகளை அதிகரித்து வேலைவாய்ப்பு, முன்னேற்றங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

திக்கம் வடிசாலையிலுள்ள பிரச்சினைகளுக்கு முடிவு கண்டு அதனை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றார்.

## செயற்பட்டு மகிழ்வோம்

சுன்னாகம் -றோ.க.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வானது நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் திருமதி யாமினி சதீஸ்குமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி சிறப்பு விருந்தினராக கிருபா லேணஸ் அதிபர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (63)

UNIVERSITY OF JAFFNA

**HUMAN RESOURCE ADVANCEMENT UNIT**

**DIPLOMA IN ENGLISH FOR OFFICERS**

**Repeat Examination-2013**

**Examinations in 1st 2 nd 3rd 4th semesters**

Application are invited for the above examinations from the students of the diploma in english for the officers's up to 12.03.2015

Application forms could be obtained form the Human Resource Advancement unit university of jaffna and perfected applications should be handed over to the same office. Repcat candidates should pay Rs-50/= for a course unit at the peoples bank university of jaffna branch or shroff office. University of jaffna. The receipts should be attached with the Examination Application Forms.

**Registrar**
university of jaffna

(C/3827)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# நிகழ்வுகள்

## விளையாட்டு விழாவும் கலைநிகழ்வும்

யாழ்.அல்கதியா முன்பள்ளியின் விளையாட்டு விழாவும் கலை நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எம்.வை.எம்.தாசீர் தலைமையில் நடைபெறவுள்ள. இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும், விளையாட்டு நிகழ்வுகளும் பரிசில் வழங்கல் வைபவமும் இடம் பெறவுள்ளது. (105)

## இலவச மருத்துவ முகாம்

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பழைய மாணவர் சங்கம் நடாத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம் ஆகியன இடம்பெறவுள்ளன. எனவே இந்த மருத்துவ முகாமில் சிகிச்சை பெற விரும்புவோர் வித்தியாசாலை மருத்துவ முகாம் மண்டபத்துக்கு வருகை தருமாறு பழைய மாணவர் சங்கத் தலைவர வைத்திய கலாநிதி என். கே.முருகானந்தா அறிவித்துள்ளார். (01)

## மாசிமகம்

அச்சுவேலி வருணன் அருள்மிகு ஸ்ரீ காளிகாதேவி சமேதர் வீரபத்திர பெருமாள் ஆலய மாசிமக திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ எஸ்.சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு மாசிமக திருவிழாவின் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீ காளிகாதேவி சமேதர் வீரபத்திர பெருமான் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். (01)

## ஆலோசனைக் கூட்டம்

எதிர்வரும் 24 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ள உலக காசரோக சங்கத்தின் கொடி தினத்திற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று மு.ப. 10 மணியளவில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் அமைச்சினது மாநாட்டு மண்டபத்தில் (சுகாதார கிராமம் பண்ணை) நடைபெறவுள்ளது.

இதில் அமைச்சரின் செயலாளர் ரவீந்திரன் பங்குபற்றவுள்ளார். (05)

# நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## வடமாகாண போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிதி மோசடிகளில் சில மக்கள் அமைப்புக்கள் ஈடுப்பட்டுள்ளமை எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனவே இவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண மீன்பிடி, வர்த்தக வாணிப போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.


கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வகையில் கதிரைகள், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்களையும், 25 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களுமாக ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கி வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமங்களில் உள்ள அமைப்புகள் சரியாக செயற்படவேண்டும் அவ்வாறு செயற்படும் போதே கிராமங்களில் உள்ள வறிய மக்களின் தேவைகளை ஓரளவுக்கு பூர்த்தி செய்துகொள்ள முடியும். பல அமைப்புகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் செயற்பட்டு வருகின்றன இந்த அமைப்புகள் முறையாக கணக்கறிக்கைகள் காட்டாது ஒரு சிலரின் சுயநலனுக்காக செயற்படுகின்றன. எனவே இந்த நிலைமைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

கிராமங்களில் காணப்படுகின்ற கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பன சரியாக இயங்கவேண்டும் அதற்காக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனக்குறிப்பிட்ட அமைச்சர் வடக்கு மாகாண சபைக்கு வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள 136 மில்லியன் ரூபாவில் யாழ்ப்பாணத்திற்கு 36 மில்லியனும், ஏனைய நான்கு மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவுக்கு தலா 25 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான வை.தவநாதன், பசுபதிப் பிள்ளை, மாவட்ட அரச அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (29)



# உங்களுக்கு நினைவிருக்கிறதா

பிரித்தானியப் பிரதமர்
டேவிற் கமரூன்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்
நவநீதம்பிள்ளை

நோர்வேயின் சிறப்புத்தூதுவர்
எரிக் சொல்கெய்ம்

ஜப்பானியத் தூதுவர்
யசூஸி அகாஸி

அமெரிக்கத் தூதுவர்
றிச்சர்ட் ஆமிரேஜ் முதல் நிஸா பிஸ்வால் வரை

இந்தியத் தூதுவர்
அசோக் கே. காந்தா

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்
எஸ். என். கிருஸ்ணா
சுஸ்மா ஸ்வராஜ்

தென் கொரியத் தூதுவர்
சாங்வோங் சாம்

கனேடியப் பிரதிநிதிகள்

..............................

தென்னாபிரிக்க உப ஜனாதிபதி
சிறில் ரமபோச

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்
டேவிற் டெலி

### இவர்களையெல்லாம் நினைவிருக்கிறதா?....

இப்படிப் பல பெரிய தலைகள் யாழ்ப்பாணம் வரை வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஆயரையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிச் சென்றார்களே...

அப்படி என்னதான் பேசினார்கள்?

இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் எவ்வளவோ கதைகளை எல்லாம் இவர்கள் எடுத்துக் கூறியதாக அறிக்கை விட்டார்களே!

அப்படி என்னதான் இவர்களிடம் கூறினார்கள்? அப்படிச் சொல்லிய சொல்லுக்கு என்னதான் மதிப்புக் கிடைத்தது?

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகையை எல்லாம் பெரிய நம்பிக்கையோடு எதிர்பார்க்கிற மாதிரி ஒவ்வொரு பத்திரிகையும் எழுதியதே.

அந்த நம்பிக்கைகளுக்கு என்ன நடந்தது?

இதையெல்லாம் எவராவது ஒரு தடவை நினைத்துப் பார்த்திருக்கிறார்களா?

இன்னும் எத்தனை காலம்தான் இப்படி வெளியாருக்குக் குடைபிடித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் எம்மவர்கள்?

எந்த ஒரு வெளிநாடாவது தமிழர்களுக்கான உரிமைகளை இழுத்தடிக்காமல் கொடுங்கள். இவ்வளவு காலத்துக்குள் கொடுங்கள் என்று இலங்கை அரசாங்கத்திடம் சொல்லியிருக்கிறதா?

அல்லது தமிழர்களுக்கான உரிமை இப்படித்தான் இருக்க வேண்டும் என்றாவது சொல்லியிருக்கிறதா?

இதற்குப் பின்னும் ஏமாளிகளாக தமிழர்கள் இருக்க வேண்டுமா?

அரசியல்வாதிகளாகிய நீங்களும் சில ஊடகங்களும் சில பிரமுகர்களும் இப்படிப் ஏமாளிகளாக வருவோரிடமும் போவோரிடமும் பல்லிளிகலாம்.

ஆனால், சனங்களை ஏமாளிகளாக்குவது நல்லதல்ல. அவர்கள் தங்கள் வாழ்வில் பெரும் துயரங்களைச் சுமந்தவர்கள். பேரிழப்புகளைச் சந்தித்தவர்கள். பெரிய பெரிய தியாகங்களைச் செய்தவர்களல்லவா!

ம. அய்யம்பிள்ளை

# பேருந்துநிலையம் அமைக்கப்படாததால் இடர்களை எதிர்நோக்கும் பயணிகள்



(கிளிநொச்சி)


கிளிநொச்சியில் பேருந்து நிலையம் அமைக்கப்படாததன் காரணமாக பயணிகள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மீள் குடியேற்றம் இடம்பெற்று ஐந்தாண்டுகள் கடந்த நிலையிலும் பேருந்து நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பல கூட்டங்களில் பேருந்து நிலையம் இல்லாமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டபோதிலும் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படவில்லை.

கிளிநொச்சி நகரத்திலிருந்து மாவட்டத்திற்குள் நடைபெறும் போக்குவரத்துப் பணிகள் மற்றும் பிறமாவட்டங்களுக்கான பேருந்துப்பணிகள் பேருந்து நிலையமில்லாமலே பலநெருக்கடிகளுக்குள் மத்தியில் இடம்பெறுகின்றது.

இதன்காரணமாக மக்கள் வெயிலிலும் மழையிலும் வீதிகளில் நின்றபடி பயணிக்கவேண்டிய நிலைகாணப்படுகின்றது. இது தொடர்பாக வடமாகாண போக்குவரத்து அமைச்சரிடம் கேட்டபோது கிளிநொச்சி மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ரூபா ஐம்பத்தெட்டு இலட்சம் நிதியுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. பேருந்துநிலையம் அமைப்பதற்கான இடமும் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்து நிலையம் அமைப்பதற்கான காணி தொடர்பான இறுதிமுடிவுகள் எட்டப்படாததன் காரணமாகவே பேருந்துநிலையம் அமைப்பதில் இழுபறி காணப்படுகின்றது.

எனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவெடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (160)

# காப்பெற் வீதியாக மாறிவரும் பண்ணை - அல்லைப்பிட்டி சந்தி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை வரை நீண்டு செல்லும் தீவக பிரதான வீதியினை அகலப்படுத்தி காப்பெற் வீதியாக மாற்றும் பணிகள் தற்போது மெதுவாக ஆனால் மிகப் பிரமாண்டமாக நடைபெற்று வருகின்றது.

அதி உயர் தொழில் நுட்பத்துடன் கனரக இயந்திரங்களின் துணையுடன் வீதி அகலப்படுத்தப்படும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் இவ்வீதி அகலப்படுத்தும் பணிகள் நிறைவடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் முழுமையாக பணிகள் நிறைவடைய நீண்ட காலம் செல்லலாம் என தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.பண்ணையிலிருந்து அல்லைப்பிட்டி சந்தி வரை தற்போது காப்பெற் போடப்பட்டுள்ள போதிலும், வீதியின் இருபக்க வழிப்பாதைகளும் முழுமையாக காப்பெற் போடப்படவில்லையென்றும் இலந்தையடியிலிருந்து அல்லைப்பிட்டிச் சந்தி வரை மட்டுமே முழுமையாக காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும்போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ் சமூகத்தின் துரதிர்ஷ்டம்!

தீவிரமான அழிவுகள் அவலங்களுக்குப் பிறகும் நமக்கான அரசியற் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். நமது நினைப்பிலிருக்கும் நமது பீடுக்கும் பெற்றிக்கும், நடைமுறையில் நமது வாழ்நிலைக்கும் ஆன இடைவெளி மிக மிக விலகிச் சென்று கொண்டேயிருக்கிறது.

ஏன் இப்படியிருக்கிறது நாம் ஏன் இப்படியிருக்கிறோம் என்று சுயவிசாரணை செய்துகொள்ள இப்போதும் சோம்பல் படுகிறோம் என்றே தோன்றுகிறது. உணர்ச்சிவசப்படாமல், ஆவேசங் கொள்ளாமல் நடைமுறை யதார்த்தத்தை உணர்ந்து நம்மை மாற்றிக்கொள்ள நம்மால் முடியவில்லை.

ஒரு வன்முறையில் நமக்குக் கோபம் உண்டாகி விட்டால், அதைப் பழிவாங்க உலகெங்குமிருந்து பெரிய பெரிய வன்முறைகளுக்கெல்லாம் வரவேற்பளிக்கும் அளவிற்கு ஆவேசம் நம் கண்ணை மறைத்து விடுகிறது. கோபத்திலும் பழியுணர்ச்சியிலும் ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்யாமலும் இருப்பதில்லை. இந்திய அமைதிப் படைக் காலம் ஓர் உதாரணம்.

ஒரு காலத்தில் இந்தியப் படையினரால் நிறையப் பாதிப்புகளை அடைந்தோம் என்பது உண்மை. அதற்குச் சற்று முன்பு அவர்கள் வருகையை நாம் விரும்பியிருந்ததும் உண்மையே. பின்னர் அவர்களை வெளியேற்றுவதற்கு நாம் தாக்குதல்கள், பிரசாரங்களைப் பெருமளவில் செய்ய வேண்டியிருந்ததும் உண்மையே.

பிறகும், இந்தியப் படையால் நமக்கு நடந்தவற்றை நம்மால் மன்னிக்க முடியாமல் போனதால் அது இந்தியா மீதான வெறுப்பாகவும் தொடர்ந்தது. நம் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகத் தீவிர நிலை எடுத்துக்கொண்ட தமிழ்நாட்டுத் தேசியர்கள் இந்தியாவை மன்னிக்கவே முடியாத எதிரியாக்கி மேலும் வெறுப்பு நிலையை வளர்த்தனர்.

இந்தியப்படை காலத்தில் நடந்ததை மறக்கவோ இந்தியாவை மன்னிக்கவோ முடியாமல் தொடர்ந்து வளர்க்கப்பட்ட வெறுப்புநிலையின் விளைவே, 2009 பேரழிவின் கடைசிக் கணங்களில் இந்தியா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய மக்களோ ஊடகங்களோ வலியுறுத்தாமல் விட்ட காரணம். வரலாற்றின் கசப்பான பழிவாங்கலாகவே அது முடிந்தது.

வெளியாருக்குக் காத்திருப்பதை நாம் இப்போதும் விடவில்லை. உள்ளே நாம் பேசித் தீர்வு காணலாம் என்று நம்புவதற்கு, நம் சூழல் நிறைய நாம் வளர்த்து வைத்திருக்கும் மாற்று சமூகங்கள் மீதான வெறுப்பு நம்மை விடுவதாயில்லை.

எனவேதான் எதுவும் நடக்காதென்று தெரிந்தும் சர்வதேசத்திற்குக் கோரிக்கைகள் விட்டுப் பேரணிகளை நடாத்திவிட்டு அண்ணாந்திருக்கிறோம். இனஅழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பிவிட்டு இனிச் சர்வதேசம் விட்ட வழி என்று கையுயர்த்திக் காத்திருக்கிறோம்.

இதெல்லாம் போகாத ஊருக்கு வழி சொல்லும் வெறும் உணர்ச்சிகரக் கொந்தளிப்புத்தான் என்று சிறுபிள்ளைகளுக்கும் தெரியும். இருந்தும், நம்மிடம் உள்ள மாற்று இன வெறுப்பு என்பது, நடக்காததையும் நடக்கும் என்று நப்பாசையுடன் காத்திருப்பதிலேயே தள்ளிவிடுகிறது.

இனரீதியான பக்க நியாயங்களைத் தமக்குள் வளர்த்து, சிங்கள வெறுப்பில் ஊறிப்போனவர்களுக்கு, இப்படியெல்லாம் உணர்ச்சிகரமான முட்டாள்தனங்களிலிருந்து கூட தமிழ் விடுதலைக் கனவொன்றை மறுபடி சிருஷ்டிக்கலாமா என்றுதான் தோன்றுகிறது.

இனரீதியான விருப்ப ஆய்வுகளைக் கடந்து சமநிலைப்பட்ட ஆய்வில் உண்மைகளைக் கண்டு மக்களுக்குச் சொல்லக்கூடிய புத்திஜீவிகளை தமிழ்ச்சமூகம் இன்னும் பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

- ஆசிரியர்

# தேர்தல் முறைமை மாற்றம்தொடர்பான தினேஸ்குணவர்த்தனவின் அறிக்கை பிழை

## – அனுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் தலைமையிலான குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கை பிழையானது என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தினேஸ் குணவர்த்தன ஆணைக்குழுவினால் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கையானது இலங்கைக்கு பொருத்தமுடையதல்ல முன்னாள் அமைச்சரின் பெயரில் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்ட போதிலும், சில பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உள்ளீடுகளே காணப்படுகின்றன.

கணித ரீதியாகவும் இந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் பிழையாகவே காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய அரசாங்கம் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்த வேண்டும் என்றார்.

# சிகிரியா சுவரில் எழுதிய யுவதிக்கு இரு வருட சிறை

சிகிரிய கண்ணாடிச் சுவரில் கிறுக்கிய மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் யுவதிக்கு இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

23 வயதான சின்னத்தம்பி உதேனி என்னும் யுவதியே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

தனியார் கைத்தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வரும் குறித்த யுவதி, சுற்றுலா ஒன்றுக்காக அண்மையில் சிகிரியா சென்றிருந்த போது அங்கு காணப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்ணாடிச் சுவரில் தனது காதலனின் பெயரை கிறுக்கியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

'தங்ஸ் உதயா' என குறித்த யுவதி எழுதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கிறுக்கல் தொடர்பில் அகழ்வாராய்ச்சி திணைக்களம் நீதிமன்றில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தது. சேதப்படுத்தப்பட்ட பகுதியை மீளவும் பழைய நிலைமைக்கு கொண்டு வர முடியாது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த யுவதிக்கு தம்புள்ள நீதவான் இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

சிகிரியா பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

# கர்ப்பிணிகளுக்கு போசாக்கு பொதி பொலநறுவையில் ஆரம்ப நிகழ்வு

கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசாங்கம் கொடுப்பதாக கூறிய போஷாக்குப் பொதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலனறுவையில் ஆரம்பமாகவுள்ளது என சிறுவர் விவகார அமைச்சர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி பௌத்த சங்க மண்டபத்தில் சிறுவர் விவகார அமைச்சின் அதிகாரிகளை தெளிவுபடுத்தும் நிகழ்வின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- 20,000 ரூபா கொடுப்பனவு வழங்க அரசு தீர்மானித்திருந்தது. அத்தொகையானது மாதாந்தம் 2000 ரூபா பெறுமதியான போஷாக்கு பொதி வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கர்ப்ப காலத்தில் ஆறு மாதங்கள் தொடக்கமும் குழந்தை பிறந்த பின்னர் ஆறுமாதங்களுக்கும் இப்போஷாக்குப் பொதி வழங்கப்படவுள்ளது.

போஷாக்கு நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களின் ஆலோசனைக்கமைய பிரதேசசபை சுகாதார காரியாலயத்தினூடாக இப்போஷாக்குப் பொதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூமலர்ந்தான் கிராமத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை

மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராம மக்களை மடு, பூமலர்ந்தான் கிராமத்தில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மடு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசோதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தம்பனைக்குளம் கிராமத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் வெள்ளப்பெருக்கின் காரணமாக அக்கிராமம் வெள்ளத்தில் மூழ்குவதோடு அக்கிராமத்தைச் சேர்ந்த 364 குடும்பங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் எவ்வித தொழில் வாய்ப்புக்களையும் மேற்கொள்ள முடியாத நிலையில் முடங்கியுள்ளதோடு ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கினால் அவர்கள் வளர்க்கின்ற கால்நடைகளும் உயிரிழக்கும் நிலை ஏற்படுகின்றது.

இம்மக்களின் நலன் கருதி மடு பிரதான வீதியில் உள்ள பூ மலர்ந்தான் கிராமத்தில் காடுகளை வெட்டி அக்கிராம மக்களை மீள்குடியேற்ற முடிவெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் தம்பனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 273 குடும்பங்கள் தமது சுய விருப்பத்தில் பூ மலர்ந்தோன் கிராமத்தில் மீள் குடியேறுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர்.

இவர்களுக்கு, பூமலர்ந்தான் கிராமத்தில் மடு பிரதேச செயலாளரினால் காணிகள் அளவீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இம்மக்கள் தற்போது தற்காலிக வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் 100 குடும்பங்களுக்கு லைக்காவின் ஞானம் அறக்கட்டளை நிதியத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் தற்காலிக வீடு அமைப்பதற்கான கூரைத்தகரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது என்றார்.


# இலங்கை மேற்கொள்ளும் நல்லிணக்கத்திற்கு ஆதரவு

## ஜப்பான் தெரிவிப்பு

இலங்கையின் புதிய அரசாங்கம் நல்லிணக்கத்தை நோக்கி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஆதரிப்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 28ஆவது அமர்வில் திங்கட்கிழமை கடந்த உரையாற்றுகையில் ஜப்பானின்உதவி வெளிவிவகார அமைச்சர் தகாசி உட்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் இலங்கை அரசாங்கத்திற்கும் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்கும் இடையிலான ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.இவ்வாறான செயற்பாடுகள் நேர்மையான ஒத்துழைப்பிற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கிறோம்,இலங்கையுடன் மேலும் ஒத்துழைப்பதற்கும் ஜப்பான் தயாராகவுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்

**கட்சியின் உள்ளக வட்டாரங்களின் தகவல்களின்படி, அநேகமான ஸ்ரீ.ல.சு.க மூத்த தலைவர்கள், அடுத்த பொதுத் தேர்தலில் ஒரு அரசாங்கம் அமைப்பதற்கு ராஜபக்ஷவிற்கு உதவி செய்வதை விட அடுத்த ஐந்து வருடங்களுக்கு எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதற்கு ஏற்றவாறு தங்கள் மனதை திடப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.**



# பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ வருவது பயனுள்ள ஒரு தெரிவா?

**ரசிக்க ஜெயகொடி கட்டுரையிலிருந்து**

இது ஜனாதிபதி சிறிசேனவின் அரசாங்கமா? இந்த அரசாங்கம் ஜனாதிபதி சிறிசேனவிற்கு சொந்தமானதாக இருந்தால், கிராமங்களில் ஸ்ரீ.ல.சு.க ஆதரவாளர்கள் அடிவாங்கும் நிலை தோன்றியிருக்குமா? ஸ்ரீ.ல.சு.க ஆதரவாளர்கள் இப்படி தங்கள் வேலைகளை இழந்திருப்பார்களா? நாங்கள் ஜனாதிபதி சிறிசேனவிடம் கேட்பதெல்லாம் மகிந்த ராஜபக்ஸவை பிரதமராகக் கொண்டு அவரது சொந்த அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்றுதான். மகிந்த ராஜபக்ஸவை பிரதமர் வேட்பாளராக ஆக்காமல் வரும் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க வால் ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியாது. மகிந்த ராஜபக்ஸவைக் கொண்டு உருவாக்கப்படும் அரசாங்கம் அனைத்து வழிகளிலும் ரணில் விக்கிரமசிங்கவை கொண்டு அமைக்கப்படும் அரசாங்கத்தை விடச் சிறந்ததாக இருக்குமென்று ஜனாதிபதி சிறிசேன விரைவிலேயே உணர்வார் .

இந்த சுவாரஸ்யமான குறிப்பைத் தான், சில நாட்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜப்க்ஸவுக்கு ஆதரவாக நுகெகொடவில் நடைபெற்ற பேரணியில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

அந்தப் பேரணி ஸ்ரீ.ல.சு.க அல்லாத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (யு.பி.எப்.ஏ) என்கிற ஒரு குடையின் கீழ்வரும் நான்கு அரசியல் கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீரவன்ச, தினே' குணவர்தன, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கமன்பில ஆகிய நால்வருமே அந்த பேரணியின் ஏற்பாட்டாளர்கள்.

நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே நிறைவேற்று ஜனாதிபதி பதவியை வகித்தவர்களில் மக்களின் வாக்குகளினால் அந்தப் பதவியில் இருந்து அகற்றப்பட்ட ஒரே ஒருவர் மகிந்த ராஜபக்ஸ தான். சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், நாட்டின் கிராமப்புற சிங்கள பௌத்த பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மை வாக்குகளை அவர் சுவீகரித்திருந்த போதிலும் அதையும் மீறி மொத்தத்தில் 400,000 பெரும்பான்மை வாக்குகளால் அவர் தோல்வியடைந்தார்.

குடும்ப ஆதிக்கம், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு சலுகை வழங்குதல், தண்டனை விலக்கு கலாச்சாரம் போன்ற குணாதிசயங்களை கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சி முறையில் அவர்கள் அதிருப்தி அடைந்திருந்தார்கள். எனினும் கிராமப்புற சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் இன்னமும் அவரை கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக நாட்டை சீரழித்து வந்த பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து நாட்டை விடுவித்த பெருமதிப்புக்குரிய தலைவர் என்றே கருதுகிறார்கள்.

இந்தப் பின்னணியில் ஸ்ரீ.ல.சு.க மற்றும் யு.பி.எப்.ஏ என்பனவற்றின் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஸ வருகை தருவது பயனுள்ள ஒரு தெரிவா?

இந்த எழுத்தாளரின் கருத்துப்படி, யு.பி.எப்.ஏ யில் உள்ள ஸ்ரீ.ல.சு.க அல்லாத கட்சிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மதம் இல்லாமல் மகிந்த ராஜபக்ஸவை பிரதமர் வேட்பாளராக ஆக்க முடியாது. யு.பி.எப்.ஏ என்கிற குடையின் கீழுள்ள கட்சிகளில் ஸ்ரீ.ல.சு.கக்கு மட்டுமே ஒரு பொதுத் தேர்தல் பிரச்சாரத்தை நடத்தக்கூடிய நாடளாவிய பரந்த கட்சி இயந்திரம் உள்ளது, அதன் வெற்றிகரமான பேரணிகளின் பங்கு, கட்சி இயந்திரத்தின் பலம் மற்றும் கள மட்டத்தில் உள்ள அதன் அங்கீகாரம் பெற்ற அமைப்புகள் என்பனவற்றிலேயே பெருமளவு தங்கியுள்ளது.

ஸ்ரீ.ல.சு.க வின் ஆதரவின்றி மகிந்த ராஜபக்ஸ தேர்தலில் போட்டியிட்டால் அவர் அவரது பாரம்பரிய கோட்டைகளான அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் மட்டுமே வெற்றி பெற முடியும்.

ஆனாலும் யு.பி.எப்.ஏ யில் உள்ள ஸ்ரீ.ல.சு.க அல்லாத கூட்டுக் கட்சிகள்

மகிந்த ராஜபக்ஸவை யு.பி.எப்.ஏ யின் பிரதமர் வேட்பாளர் என்கிற கப்பலில் திரும்பவும் ஏற்றுவதற்கான பரபரப்பான ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அவர்களின் கருத்துப்படி கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக ராஜபக்ஸவை தேர்வு செய்வதன் மூலம் தங்களுக்கும் மற்றும் ஸ்ரீ.ல.சு.க வுக்கும் ஒரு வெற்றி நிலையை உருவாக்க அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

எனினும் ஸ்ரீ.ல.சு.க வுக்கு வேறு திட்டங்கள் உள்ளன. கட்சியின் கீழ்மட்டத் தொண்டர்கள் மகிந்த ராஜபக்ஸ திரும்பவும் வரவேண்டும் என்று விரும்பினாலும்கூட, கட்சியின் மூத்த தலைவர்கள் உட்பட கட்சியில் உயர் பதவிகளை வகிப்பவர்கள் இந்த யோசனைக்கு விருப்பப்படவில்லை.

கட்சிக்குள் ராஜபக்ஸக்களின் மறுவரவு கட்சியின் உயர் மட்டத்தை நோக்கிய தங்கள் நகர்வுக்கு தடையாக இருக்கும் என்பது அவர்களின் கருத்தாக உள்ளது, ஏனென்றால் மீண்டும் ஒருமுறை கட்சியின் முடிவு எடுக்கும் அங்கமாக ராஜபக்ஸாக்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விடுவார்கள்.

ராஜபக்ஸ சார்பான அரசியல் கட்சிகளின் (விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்தன, உதய கமன்பில) கூட்டணி ராஜபக்ஸவுக்கு சில விளம்பர முன்னணி ஊக்கத்தை தவிர பெரிதாக வேறு நன்மை எதையும் செய்யாது. அதனால்தான் தேர்தல் போட்டிக்குள் நுழைய முன்னாள் ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு தேவைப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலைப் போல அல்லாது எந்தப் பொதுத் தேர்தலிலும் ஒருவரின் வெற்றியோ அல்லது தோல்வியோ தீர்மானிக்கப்படுவது கட்சி இயந்திரத்தின் பலத்தைக் கொண்டே.

இதற்கு மேலதிகமாக ஏனைய

**ஸ்ரீ.ல.சு.க அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவது ஒரு இரண்டு வருட காலத்துக்கு ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கும் திட்டத்துடனேயே. அவர்கள் யு.பி.எப்.ஏ யின் சின்னமான வெற்றிலையில் இருந்து மாறி ஸ்ரீ.ல.சு.க வினது பாரம்பரிய சின்னமான கை சின்னத்தின் கீழ் போட்டியிடலாம்.**

சில ஸ்ரீ.ல.சு.க நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட தங்களை முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஸவுடன் இணைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் சிலரான, ரி.பி. ஏக்கநாயக்கா, சி.பி. ரத்னாயக்கா, குமார வெல்கம, டிலும் அமுனுகம, மனுஸ்ஸா நாணயக்காரா, விதுர விக்கிரமநாயக்க, மற்றும் மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க போன்றவர்கள் ஸ்ரீ.ல.சு.க பிரதிநிதிகள் என்றில்லாமல் தங்களின் தனிப்பட்ட விருப்பத்தின் பெயரில் அந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந்தார்கள்.

எனினும் ஸ்ரீ.ல.சு.க யின் மூத்த தலைவர்கள் இந்த ராஜபக்ஸ சார்பான குரல்களினால் அமைதியற்றுள்ளார்கள், யு.பி.எப்.ஏ கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள் விவகாரங்களில் இந்த முயற்சி மூலம் அத்துமீறி தலையீடு செய்வ்தாக அவர்கள் கருதுகிறார்கள். அதனால்தான் ஸ்ரீ.ல.சு.க வின் சிரேஷ்ட தலைவர்களான நிமால் சிறிபால டீ சில்வா, அனுரபிரியதர்சன யாப்பா மற்றும் சுசில் பிரேம்ஜயந்த போன்றவர்கள் இந்த நடவடிக்கைகளில் இருந்து தங்களை தூரப்படுத்தியுள்ளார்கள்.

தீவிர அரசியலுக்கு ராஜபக்ஸவின் மறுவரவை பெரிதும் எதிர்பார்க்காத அரசாங்கம் கூட, இந்த விடயம் தொடர்பாக கவலை அடைந்துள்ளது. ராஜபக்ஸாக்களின் கீழ் ஸ்ரீ.ல.சு.க வின் மூத்த தலைவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்பட்டார்கள். அதேவேளை ஐதேக விலிருந்து வந்தவர்களுக்கு முன்னுரிமையும் சிறந்த சலுகைகளும் வழங்கப்பட்டன.

கட்சியின் உள்ளக வட்டாரங்களின் தகவல்களின்படி, அநேகமான ஸ்ரீ.ல.சு.க மூத்த தலைவர்கள், அடுத்த பொதுத் தோதலில் ஒரு அரசாங்கம் அமைப்பதற்கு ராஜபக்ஸவிற்கு உதவி செய்யவதை விட அடுத்த ஐந்து வருடங்களுக்கு எதிர்கட்சி வரிசையில் அமர்வதற்கு ஏற்றவாறு தங்கள் மனதை திடப்படுத்திக் கொண்டுள்ளார்கள். எனவே பிரதமர் வேட்பாளராக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக

களமிறங்குவதற்கு மகிந்தவுக்கு இன்னமும் சிறிதளவு வாய்ப்புகள் மட்டுமே உள்ளன.

தற்சமயம் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நிமால் சிறிபால டி சில்வாவின் பிரதம மந்திரிக் கனவுகளையும் ஒருவர் குறைத்து மதிப்பிட முடியாது. அரசாங்கத்துடன் யுத்தப் பிரகடனம் செய்யாமல் டி.சில்வா கூட்டுச் செயல்பாட்டு அரசியலை நாடியுள்ளார், அது தன்னை வல்லமை மிக்க எதிரிகளான நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் மகிந்த ராஜபக்ஸ ஆகியோருக்கு சமீபமாக தன்னையும் பிரதம மந்திரி பதவிக்கு அருகில் கொண்டு செல்லும் என அவர் கருதுகிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தை பொறுத்தவரை ஒரு முக்கியமான காரணியாக மாறியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை எதிர்க்கட்சித் தலைவர் பகைத்துக் கொள்ளவில்லை.

இந்தக் கட்டத்தில் ஊகிக்கக் கூடியதாக உள்ளது ஸ்ரீ.ல.சு.க அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவது ஒரு இரண்டு வருட காலத்துக்கு ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கும் திட்டத்துடனேயே. அவர்கள் யு.பி.எப்.ஏ யின் சின்னமான வெற்றிலையில் இருந்து மாறி ஸ்ரீ.ல.சு.க வினது பாரம்பரிய சின்னமான கை சின்னத்தின் கீழ் போட்டியிடலாம். ஸ்ரீ.ல.சு.க இந்த முடிவை 'உத்தியோகபூர்வமாக எடுத்தால் அப்போது அந்த முடிவு, ராஜபக்ஸவின் பிரதமர் கனவை ஆகக் குறைந்தது அடுத்த ஐந்து வருடங்களுக்காவது கலையச் செய்துவிடும்.

# பொருளாதார உடன்படிக்கைகள் மூலம் அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சி

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

பொருளாதார உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு அதன் ஊடாக இலங்கையில் சில வெளிநாடுகள் அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1948ஆம் ஆண்டு இலங்கைக்கு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் கிடைக்கப் பெற்றது. மீண்டும் இவ்வாறு வெளிநாட்டு சக்திகள் நாட்டை ஆட்சி செய்ய இடமளிக்க முடியாது.

இலங்கை இவ்வாறான விடயங்கள் குறித்து மிகவும் உன்னிப்பாக அவதானம் செலுத்தும்.

சில பெரிய நாடுகள் சிறிய நாடுகளின் விவகாரங்களில் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு தலையீடு செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.



அபிவிருத்தி உதவிகள் என்ற போர்வையில் இந்த தலையீடுகள் இடம்பெறுகின்றன.

அபிவிருத்தி உதவி, பாதுகாப்பு உதவி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்ற பல்வேறு பரிமாணங்களில் இவ்வாறு தலையீடு செய்யப்பட்டு வருகின்றது.

புதிய தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி நாடுகள் மீது தலையீடு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் தெரிவு அடிப்படையில் செயற்பட்டு வருவதாகஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் செல்லவிருந்த தாயும் 8வயது மகளும் கைது

பிரான்ஸ் குடியுரிமை பெற்ற சிறுமியும், மற்றும் தாயும் நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கைது செய்யப்பட்ட மகளும் தாயும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இது குறித்து தெரியவருவதாவது,

பிரான்ஸ் நாட்டிலிருந்து அண்மையில் விடுமுறையில் இலங்கை வந்திருந்த சிறுமியும் தாயும் நேற்று முன்தினம் காலை பிரான்ஸ் நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் சென்றிருந்தனர்.

அவர்கள் இருவரும் விமானநிலையத்தில் பயணிப்பதற்கான சூட்கேஸ்களை ஒப்படைத்துவிட்டு, போர்டிங் எடுப்பதற்கென அவர்களது கடவுச்சீட்டுக்கள் கொடுத்தபோது விமானநிலையத்திலுள்ள புலனாய்வுப் பிரிவினரால் குறித்த தாயும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளன்ர். கைதான பகீரதியின் மகள் பகல்வி(8 வயது) பிரான்ஸ நாட்டு குடியுரிமை பெற்றவராவார்.

## இந்திய மீனவர் குழு இலங்கைக்கு வருகை

கடற்படையால் தடுத்து வைக்கப்பட்ட படகுகளை மீட்பதற்காக தமிழகத்தில் இருந்து 140 பேர் அடங்கிய மீனவர் குழுவொன்று இன்னும் ஓரிரு தினங்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கை செல்வதற்கான அனுமதிக் கடிதத்தை, இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சினால் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம், கோட்டைப்பட்டிணம், மண்டபம், ஜெகதாப்பட்டிணம், உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 20 படகுகளின் மூலம் மீனவர்கள் இலங்கைக்கு வரவுள்ளதாக தெரியவருகிறது.

இதேபோன்று, புதுச்சேரி மாநிலம் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 20 பேரும் இலங்கை வர இருப்பதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன

## 3 பாரிய நிதிமோசடிகளுக்கு விசாரணைகள் ஆரம்பம்

பாரியளவான நிதி மோசடிகள குறித்த விசாரணைகளுக்காக நிறுவப்பட்டுள்ள விசேட பொலிஸ பிரிவானது, இதுவரை பாரியளவான மூன்று நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.



ஊழல் மோசடி விசாரணை தொடர்பில் விசேட பயிற்சிகள் மற்றும் அனுபவங்களைக்கொண்ட 60 அதிகாரிகள் இந்தப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர் அலுவலகத்தின் ஊடாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தவறான பணச்சலவை நிதி நிறுவனங்கள் மறுப்பு

தவறான பணச்சலவை குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்யப்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தமது நிறுவனங்கள் ஊடாக கணக்குகளை கொண்டிருக்கவில்லை என்று சில நிதிநிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டியவிடம் குறித்த நிறுவனங்கள் இது தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

ஏற்கனவே போதைவஸ்து கடத்தல்காரர் வெலே சுதா என்ற சமந்த பெரேரா என்பவர் தாம், துமிந்த சில்வாவுக்கு பெருந்தொகை பணம் வழங்கியதாக வாக்குமூலம் அளித்திருந்தார்.

இதனையடுத்து துமிந்த சில்வா கொண்டிருந்த வங்கி மற்றும் நிதி நிறுவன கணக்குகளை ஆராயுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் சில நிதி நிறுவனங்கள் தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

## மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் வெற்றிடங்களை நிரப்ப உத்தரவு

(கொழும்பு)

கையூட்டல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

ஆணைக்குழுவின் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவிற்கும் உதவிகளை வழங்க வேண்டுமென சகல அரச நிறுவனங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.



கையூட்டல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சமூகத்தில் ஓர் நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க போதியளவு ஆளணி வளம் கிடையாது என கையூட்டல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்ரமசிங்க அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் காரணிகளை கருத்திற்கொண்டு மேலும் அதிகாரிகளை இணைத்துக் கொண்டு ஆணைக்குழுவின் பணிகளை மேம்படுத்த பிரதமர் தீர்மானித்துள்ளார்.

## பொதுபலசேனவுக்கு எதிரான வழக்கு விசாரணை

(கொழும்பு)

புனித அல்குர்ஆன் அவமதிப்பு மற்றும் நிப்போன் ஹோட்டலில் இடம்பெற்ற வட்டரக்க விஜித தேரரின் ஊடகவியலாளர் மாநாட்டை குழப்பியமை தொடர்பில் பொதுபலசேன அமைப்பின் தேரர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் நீதிவான் திலினி கமகே முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இதன்போது, புனித அல்குர் ஆன் அவமதிப்பு தொடர்பான வழக்கில், பொதுபலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் சுகயீனம் காரணமாக நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கவில்லை என அவரது சட்டத்தரணி நீதவரனிடம் அறிவித்தார். இதனையடுத்து, எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள வழக்கு விசாரணையின் போது ஞானசார தேரர் ஆஜராக வேணடும் என அறிவித்த நீதவான், சுகயீனம் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

நிப்போன் ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பை குழப்பியமை தொடர்பிலான வழக்கில் தேரர்கள் 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் சுகயீனம் காரணமாக ஞானசார தேரர் ஆஜராகவில்லை. மேலும் மூன்றாவது சந்தேக நபரான வெலிமட சந்திர ரத்தன ஹிமி, ஐந்தாவது சந்தேக நபரான ஆரிய வன்ச ஹிமி மற்றும் எட்டாவது சநதேக நபரான பதிரனகே குணவர்தன ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. பொதுபலசேன அமைப்பின் சார்பில் தேசிய அமைப்பாளர் விதாரந்தனிய நந்த தேரர் தலைமையில் ஐந்து தேரர்கள் ஆஜராகினர். இதேவேளை, பொதுபலசேன அமைப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த எம்தாஜுதீன் உட்பட சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் மற்றும் ருஷ்தி ஹபீப் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

## தங்கம் கடத்திய இலங்கையர் கைது



சிங்கப்பூரில் இருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்திச் சென்ற இலங்கை பிரஜை ஒருவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டில்லி விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பிரஜையிடம் இருந்து இரண்டரை கிலோ தங்கமும் மற்றைய பிரஜையிடம் இருந்து இரண்டு கிலோ தங்கமும் மீட்கப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி இந்திய ரூபாவில் ஒரு கோடியே 11 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கட்டார் விபத்தில் இரு இலங்கையர் மரணம்

கட்டாரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த இளைஞர்கள் இருவர் மரணமடைந்துள்ளனர்.

கோவில் போரதீவை சேர்ந்த ச.துவாரகன், பெரியநீலாவணையை சேர்ந்த ச.சுகந்தன் ஆகியோரே மரணமடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் பயணித்துக்கொண்டிருந்த காரும் லொறியொன்றும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இரட்டை பிரஜாவுரிமை ஒழுங்குவிதிகள் அடுத்தவாரம்

இரட்டைப் பிரஜாவுரிமை விசா கோரி விண்ணப்பிப்பவர்களுக்கான புதிய சட்டதிட்டங்கள் வெளியிடப்படவுள்ளன.

இந்த சட்டதிட்டங்கள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது என குடிவரவு, குடியகல்வு நிர்வாக அதிகாரி நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இரட்டை பிரஜாவுரிமை விசா கோரி விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ளவர்கள் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு



விதிகள் குறித்து குடிவரவு, குடியகல்வு திணைக்கள இணையத்தளத்திற்குள் பிரவேசித்து பார்வையிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



# நீயும் நானுமா...? கண்ணா நீயும் நானுமா...?

"மாற்றம்" என்ற கோரிக்கையின் அடிப்படையில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி, குறைந்த பட்ச நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையுடனும் பிரதமர் பதவியுடன் அமைச்சரவையையும் பெற்றுக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, 100 நாட்கள் முடிந்ததும் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்தவேண்டும் என்பதில் இப்போது உறுதியாக இருக்கிறது.

தேர்தல் காலத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டம் முழுமையடைந்ததோ இல்லையோ, இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக மக்களை குளிர்விக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் "குளிர்" காய்வதற்கு முன்பதாக அதனை வாக்குகளாக அறுவடை செய்துவிடவேண்டும் என்ற அவசரம் அதற்கு.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த தேர்தல் திட்டத்துக்கு சுதந்திரக் கட்சியின் ஆதரவை வெற்றிகொள்ளும் முயற்சிகள் ஒரு பக்கம் நடந்துவரும் நிலையில், தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பு பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வந்துவிடுவாரோ என்ற கலக்கம் அதற்கு எழுந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற கோரிக்கையுடன் நுகேகொடவில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் எண்ணிக்கை இந்தக் கலக்கத்தை இன்னும் அதிகரித்துவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக நிறுத்துவதற்கு சுதந்திரக் கட்சிக்குள்ளேயும் முழுமையான ஆதரவு இருப்பதாகத் தெரியாவிட்டாலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சிகளின் ஆதரவும், சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் மகிந்த ராஜபக்ஷ விசுவாசிகளின் ஆதரவும் எங்கே அவரை பிரதமர் வேட்பாளராக்கிவிடுமோ என்ற அச்சத்தை தொடர்ந்தும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றன.

சுதந்திரக் கட்சிக்குள் அடுத்த பிரதமர் வேட்பாளர் கனவுடன் இருக்கும் சிலருக்கும், கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும் கூட மகிந்தவின் மீள்வருகை மகிழ்ச்சியளிக்க வில்லை என்று ஒருசாரார் கருத்து வெளியிடுகின்றனர். இதற்காகவே தேர்தலை தவிர்த்து தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனைக்கு சுதந்திரக் கட்சியும் ஆதரவு வழங்கும் யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.




மகிந்தவின் மீள்வருகையை விரும்பாத சு.க.வில் இருக்கும் ஒரு சாராரும், ஐ.தே.க.வும் இவ்வாறு தேசிய அரசாங்க வியூகம் அமைத்து மகிந்த என்கின்ற பொது எதிரியை தவிர்ப்பதற்கு முனைந்தாலும், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைத்தல், புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்களிலும் ஒத்த நிலைப்பாட்டை எட்டுவதில் ஐ.தே.க.வும், சு.க.வும் முட்டுப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போது இருக்கின்ற இந்த நிலைமைகள் எப்படியும் விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கான அறிகுறிகளாகவே தென்படுகின்ற சூழ் நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக தேர்தல் களத்தில் எதிர்கொள்வதற்கு தற்போதைய பிரதமர் ரணில் தயாராகி வருவதையே அவருடைய அண்மைக் கால கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

மகிந்தவை தேர்தலில் எதிர்கொள்ளத் தயார் என்று காட்டமாக தெரிவித்திருக்கும் ரணில், ஒரேயொரு தடவை மட்டுமே வெறும் ஒரு இலட்சத்து 80ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ தன்னைத் தேர்தலில் தோற்கடித்தார் என்றும், அதுவும் விடுதலைப் புலிகளின் உதவியினாலேயே சாத்தியப்பட்டது என்றும் போட்டுடைத்திருக்கிறார்.

மகிந்த தேர்தல் களத்துக்கு வரமாட்டார் என்று தனக்கு நன்கு தெரியும் என்றும், மகிந்தவை முன்னிறுத்தி சுதந்திரக் கட்சி பிளவுபடும் என்றும் எதிர்பார்க்கையுடன் கருத்து வெளியிட்டு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இவையெல்லா வற்றையும் கடந்து மகிந்த போட்டிக்கு வந்துவிட்டால் அதற்கும் தான் தயார் என்று சவால் விட்டிருக்கிறார்.

ஆக, நாடாளுமன்றத் தேர்தல் நடந்து அதில் மகிந்தவும் போட்டியிடும் ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், "நீயும் நானுமா... (மீண்டும்)கண்ணா நீயும் நானுமா...?" என்று ரணிலும், மகிந்தவும் ஒருவரையொருவர் எதிர்கொள்ளும் சுவாரஸ்யமான களமாகவே அது இருக்கும்.

எஸ்.அனசூயா

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

05.03.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




புலம் புலன் பெயர்ந்தவர்களும்

- நாடாளுமன்றத் தேர்தலும் கட்சிகள் எதிர்கொள்ளும் சவால்களும்!
- உக்ரேன் போர்நிறுத்தம்
- இணக்க அரசியல் இதுதானா –மொக்கன் கேட்கிறான்–

சச்சின் கூறுகிறார்



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு – சுவை – சுவாரசியம் – இதுதான் தினமுரசு





நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், இசையும் அசைவும் நிகழ்வையும் பிரதம விருந்தினர் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் காணலாம். (137)

# டோனியின் புதிய அணுகுமுறை



உலகக்கிண்ணத் தொடரில் ஒவ்வொரு போட்டி முடிந்ததும் சக வீரர்களுக்கு உணவு கொடுத்து அசத்துகிறார் டோனி.

நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் தொடர் வெற்றிக்கு வீரர்களின் அசத்தல் கூட்டணியும் காரணம். ஆரம்பத்தில் பாகிஸ்தானை பதம் பார்த்த இந்த வெற்றி கூட்டணி, தென்னாபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என புரட்டியெடுத்தது.

இந்த வெற்றி அணிக்கு தலைமை தாங்கும் அணித்தலைவர் டோனி, சக வீரர்களுடன் நட்பை அதிகரிக்க, புது உத்தியை கையாள்கிறார்.

இவர் பாகிஸ்தானுக்கு எதிரான லீக் போட்டியில் வென்றதும், ரெய்னா, அக்சர் படேலை அழைத்துக் கொண்டு அடிலெய்டில் உள்ள ஹோட்டலுக்கு மதிய உணவுக்கு சென்றார். அங்கு சூடான "கிரில் சிக்கனை" அனைவரும் உண்டனர்.

இந்நிலையில் இரண்டாவது லீக் போட்டியில் தென்னாபிரிக்காவை வீழ்த்திய இந்திய அணி, அடுத்த இரு போட்டிகளை பேர்த் மைதானத்தில் விளையாடுகிறது. இதற்காக இந்திய வீரர்கள் பேர்த்தின் ஹயாத் ஹோட்டலில் தங்கியுள்ளனர்.

போட்டிகள் இல்லாத காரணத்தால், வீரர்கள் மதிய உணவுக்கு வெளியே செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. இம்முறை கடும் வெயிலில் துணை அணித்தலைவர் விராட் ஹோலி, முகமது 'மி ஆகியோரை அழைத்துக் கொண்டு விருந்துக்கு புறப்பட்டார் டோனி.

இந்த புதிய அணுகு முறையால் இந்திய வீரர்களிடையே ஒற்றுமை அதிகரித்து, இந்த வெற்றி கூட்டணி மேலும் வலுவாகும் என்பதே டோனியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# வடக்கின் 109 ஆவது பெரும் போட்டியில் வழங்கப்படவிருக்கும் பரிசில்கள்

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நாளை ஆரம்பமாகவிருக்கும் கிரிக்கெட் போட்டியில் வழங்கப்படவிருக்கும் பரிசில்களின் விபரம் வருமாறு,

| | |
|---|---|
| சிறந்த துடுப்பாட்ட வீரர் | - வெற்றிக்கிண்ணம், கிரிக்கெட் துடுப்பு, சுரேன்குமார் பணப்பரிசு 5,000 ரூபா |
| சிறந்த பந்து வீச்சாளர் | - வெற்றிக்கிண்ணம், கிரிக்கெட் துடுப்பு |
| சிறந்த களத்தடுப்பாளர் | - வெற்றிக்கிண்ணம், கிரிக்கெட் துடுப்பு |
| சகலதுறை ஆட்டக்காரர் | - வெற்றிக்கிண்ணம், கிரிக்கெட் துடுப்பு |
| ஆட்ட நாயகன் | - வெற்றிக்கிண்ணம், கிரிக்கெட் துடுப்பு, JCC Swiss பணப்பரிசு 5,000 ரூபா |
| சிறந்த விக்கெட் காப்பாளர் | - வெற்றிக்கிண்ணம், கிரிக்கெட் துடுப்பு, நித்தி கனகரட்ணம் பணப்பரிசு 5,000 ரூபா |
| வெற்றிபெறும் அணிக்கான கேடயம் | - புஸ்பாகரன் அன்பளிப்பு சரஸ்வதி ஞாபகார்த்தம் பணப்பரிசு ரூபா 100,000 |

# இலங்கை வீரர்கள் சிறப்பான துடுப்பாட்டம்

உலகக்கிண்ணத்தில் நேற்றுமுன் தினம் வரை இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் இலங்கை வீரர்களின் துடுப்பாட்டமானது மிகச்சிறப்பானதாக உள்ளது.

அதிகூடிய ஓட்டங்களை குவித்துள்ளவர்கள் வரிசையில் சங்கக்கார 268 ஓட்டங்களைப் பெற்று முதலாமிடத்தில் உள்ளார். அவரைத் தொடர்ந்து திரிமன்னே மற்றும் டில்ஷான் ஆகியோர் முறையே மூன்றாம் மற்றும் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

இதில் திரிமன்னே மொத்தமாக 256 ஓட்டங்களையும், டில்சான் 229 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அதிகூடிய தனிப்பட்ட ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் வரிசையில் டில்ஷான் 161 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும் திரிமன்னே 139 ஓட்டங்களுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர்.

அதிகளவான நான்கு ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டவர் வரிசையில் சங்கக்கார 30 நான்கு ஓட்டங்களை மொத்தமாகப் பெற்று முதலிடத்திலுள்ளார். அத்துடன் இவரே 134.00 எனும் அதிகூடிய சராசரியையும் பெற்றுள்ளார்.

இரண்டு சதங்களைப் விளாசியுள்ள சங்கக்கார சதமடித்துள்ளவர்கள் வரிசையில் முதலிடத்திலும் 2 அரைச்சதங்களை பெற்றுள்ள திரிமன்னே இரண்டாம் இடத்திலுமுள்ளனர்.

## உலகக் கிண்ணம் 2015

### இன்றைய ஆட்டம்

பாகிஸ்தான்
எதிர்
ஐக்கிய அரபுஇராச்சியம்
இடம்- நேப்பியர்
நேரம்- காலை 06.30

அவுஸ்ரேலியா
எதிர்
ஆப்கானிஸ்தான்
இடம்- பேர்த்
நேரம்- பகல் 12.00

### நாளைய ஆட்டம்

பங்களாதேஷ்
எதிர்
ஸ்கொட்லாந்து
இடம்- நெல்சன்
நேரம்- காலை 03.30

# 201 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா அபாரவெற்றி



அவுஸ்ரேலியாவில் நேற்று இடம்பெற்ற தென்னாபிரிக்கா - அயர்லாந்து அணிகளுக்கிடையேயான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் குழு "பி" இற்கான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 201 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதையடுத்து களமிறங்கிய அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 411 ஓட்டங்களைப் பெற்றது.

ஹாசிம் அம்லா 128 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 16 பவுண்டரிகள் அடங்கலாக 159 ஓட்டங்களை விளாசினார். பிளிசிஸ் 109 ஓட்டங்களைப் பெற்றார். மெக்பிரைன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



412 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அயர்லாந்து அணி 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அன்டி பல்பிரைனி 58 ஓட்டங்களைப் பெற்றார். கைல் அபோட் 8 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் அம்லா தெரிவானார்.

# வடக்கின் போர்

| | |
|---|---|
| 10.00 - 12.00 | முதற் பகுதி ஆட்டம் |
| 12.00 - 12.40 | மதிய உணவு இடைவேளை |
| 12.40 - 02.40 | இரண்டாம் பகுதி ஆட்டம் |
| 02.40 - 0.300 | தேனீர் இடைவேளை |
| 03.00 - 05.00 | மூன்றாம் பகுதி ஆட்டம் |

வடக்கின் பெரும் கிரிக்கெட் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி சென்.ஜோண்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 109 ஆவது பெரும் கிரிக்கெட் போட்டி நாளை முதல்.7 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நாள் நிகழ்வு காலை 9.15 இற்கு வீரர்கள் அறிமுகம் இடம்பெற்று முற்பகல் 10.00 இற்கு போட்டிகள் ஆரம்பமாகும்.

ஒரு நாளிற்கு 6 மணித்தியால விளையாட்டில் குறைந்தது 90 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மூன்று நாள் போட்டியாக இப்போட்டி நடைபெறும்.

இரு கல்லூரி மாணவர்களும் பாடசாலைச் சீருடையுடன் மட்டுமே போட்டியைக் கண்டு களிக்க அனுமதிக்கப்படுவார்கள். பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் இருப்பிட வசதி கொண்ட பகுதிக்காக ரூபா 100 ஐச் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.


சுப்பிரமணியம் பூங்காப் பக்கமாக உள்ள நுழைவாயிலூடாக சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும், மேற்குப் பக்கமாக உள்ள நுழைவாயிலூடாக பழைய மாணவர்களும், ஆர்வலர்களும் அனுமதிக்கப்படுவர். ரிம்மர் மண்டபப் பக்க வாயிலூடாக மததிய கல்லூரி பழைய மாணவர்களும், கிழக்குப பக்க வாயிலூடாக மத்திய கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் அனுமதிக்கப்படுவர். விளையாட்டு வீரர்கள், மாணவ தலைவர்கள், மத்தியஸ்தர்கள், வைத்திய அதிகாரி தவிர்ந்தோர் எல்லைக் கோட்டிற்குள்ளே எக்காரணம் கொண்டும் உட்பிரவேசித்தல் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

மாணவர், ஆசிரியர், பழைய மாணவர், விருந்தினருக்கு என ஒதுக் கப்பட்ட இடங்களில் மட்டுமே அவரவர் அனு மதிக்கப்படுவர். ஒரு இடத்தைவிட்டு இன்னோர் பகுதிக்கோ அல்லது மைதானததை சுற்றி வரவோ இயலாது.

மதுபோதை அல்லது போதைவஸ்துக்கள் பாவனையுள்ள எவரும் விளையாட்டினைப் பார்க்க அனு மதிக்கப்பட மாட்டார்கள். கல்லூரி சீருடையுடன் எந்த ஒரு மாணவனும் வீதிகளில் உலா வருதலோ அல்லது பணம் சேகரிததலில் ஈடுபடு வோரோ பாதுகாப்புத் துறையினரால் பொறுப்பேற்கப்படுவர்.

போட்டி நடைபெறும் நாட்களில் மைதானத்தின் எல்லைக்கோட்டுககுள் இரு கல்லூரி விளையாட்டு வீரர்கள், மத்தியஸ்தர்கள், மாணவத தலைவர்கள், வைத்திய ஆலோசகர்கள் தவிர்ந்த ஏனையோர் அனுமதிக்கப்படமாட்டார்கள். மீறுவோர் தண்டனைக்குரியவர்களாக கணிக்கப்படுவார்கள். இவ்விளையாட்டில் பாதுகாப்பினை, மைதானத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உறுதி செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு இரு கல்லூரி சமூகத்தினராலும் வழங்கப்படுகிறது.

இரு கல்லூரிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு போட்டி நடுவர் ஆட்டத்தில் நியமிக்கப்படுவர்.



கணேசலிங்கம் நிதுசன்



சிவபாலசுந்தரம் அலன்ராஜ்


வெஜிலியாஸ் டினோஜன்


சதாகரன் திரேசன்


யோகராசன் கிருபாகரன்



பத்திநாதன் நிரோஜன்
தலைவர்


சிவராசா மதுசன்
உபதலைவர்

## யாழ். மத்திய கல்லூரி அணி


சதீஸ் கோமிதகன்


உதயகுமார் பிரியலக்சன்


சுரேஸ் கார்த்தீபன்


ஸ்ரீஸ்கந்தராசா கௌதமன்


செல்வராசா மதுசன்


சிவலிங்கம் தசோபன்


அருண்சியஜ் தனுசன்



விஜயகுமார் திசோத்



கென்றிகூலஸ் தீபன்ராஜ்



அ.சில்வெஸ்ரர் ஜெறொசன்

# நாளை ஆரம்பம்


## சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி


சஜீந்திரன் கபில்ராஜ்
தலைவர்


ரவீந்திரன் லோகதீஸ்வரன்
உப தலைவர்



பரமாநந்தம் துவாரகசீலன்


அருளானந்தம் கானமிர்தன்


மணிவண்ணன் செந்தூஜன்



ராஜசிறி பிரிசங்கர்



செபமாலைபிள்ளை
ஜெனிபில்மின்



வசந்தன் யதுஷன்


அமரசேன கிறோல்ட்லக்கி


தேவராஜா கஜீபன்


கனகரட்ணம் கபில்ராஜ்


ஜெயகுமார் கிஷாந்துயன்


திலகராஜா சிவதர்சன்


சந்திரமோகன்
தேவபிரசாந்த்


றொனில் சிலுமைல்


சிவஞானம் டினோஜன்


அந்தோனிப்பிள்ளை
கிஷாந்தன்

மகரந்தம்

# ஐரோப்பியர்களின் பதற்றம்!

ஐரோப்பியர்கள் இன்று நிறைய விஷயங்களில் குழம்பி இருக்கிறார்கள். ஒரு புறம் அரசாங்கத்தின் சமூகத் தலையீட்டை குறைத்துக்கொள்ள வேண்டும் என்று கூக்குரல், இன்னொரு புறம் அரசாங்கம் தனிமனித உரிமைகளில், சுதந்திரங்களில் தலையிடாமல், பொருளாதாரத்தை மட்டும் தூக்கி நிறுத்த எல்லா முயற்சியும் செய்ய வேண்டும் என்ற கூக்குரல், அதை எதிர்த்து பொருளாதாரத் துறையில் அரசு சிறிதும் தலையிடக்கூடாது, அரசுடைய செலவை சுருக்கிக் கொண்டால் சந்தை அமைப்பு மக்களுக்கு பெரும் செல்வச் செழிப்பைக் கொணரும் என்ற முதலாளிகளின் குரல்.

மூன்றாவது திக்கில், ஆபிரிக்கா, மேற்காசியா போன்ற நிலப்பரப்புகளில் இருந்து எதிலாவது தொத்திக் கொண்டு கடல் வழியே ஐரோப்பாவுக்குள் நுழைந்து விட முயலும் பொருளாதார அகதிகள், அரசியல் அகதிகள், வாய்ப்பு தேடி ஓடி வரும் குடியேற்ற முயற்சிக்காரர்கள். இவர்களைப் பல ஐரோப்பிய நாடுகள் உள்ளே நுழைய விடாமல் கடும் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்கின்றன. பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, கிரீஸ் போன்றன இப்படி. இவற்றுக்குள்ளேயும், ஸ்காண்டிநேவிய ஜனநாயகங்கள் என்று தாராளமான குடியேற்றக் கொள்கைகளும், அகதிகளுக்குப் புகலிடம் தரும் கொள்கைகளும் வைத்திருப்பதாக இத்தனை காலமாகப் பெருமிதம் கொண்டிருந்த (இது அப்படி ஒன்றும் உண்மை இல்லை என்பது வேறு விஷயம்) நாடுகளிலும் இப்போது இந்த தடுப்புக்கு எதிர்ப்பு இருந்தாலும் அரசுகள் வேறு ஒரு காரணத்தால் தம் "தாராள"க் கொள்கைகளைக் கைவிடத் துவங்கி உள்ளன. அது என்ன வேறு ஒரு காரணம்?

அதுதான், உலகப் புற்று நோயாக உருவெடுத்துள்ள ஐஸிஸ் பயங்கர வாதத் தாக்குதல்கள், மற்றும் பொதுப் என்று பற்பல கடும் தேசியவாத நடவடிக்கைகளில் அந்த அரசுகள் இறங்குகின்றன.

இப்போது ஒரு விசித்திரமான. இருதலைக் கொள்ளி நிலை எழுந்துள்ளது. ஒரு புறம் பயங்கர வாதத்தால் திடீர் திடீரென்று நகரங்களில் கொலைவெறித் தாக்குதல்கள் நடக்கத் தொடங்கி உள்ள நிலையில் பல ஐரோப்பிய அரசுகள் நகரெங்கும் கண்காணிப்புக் கமெராக்களைப் பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதோடு, மக்களைச் சோதிக்கும் முயற்சிகளை கொடுக்கப்படவிருக்கின்றன.

இந்த நிலையில் கடந்த பல பத்தாண்டுகளாக இஸ்ரேலைக் கடுமையாக விமர்சித்து, மிரட்டி, பல வகை எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்து வந்த ஐரோப்பிய இடது-வலது சாரியினர் இப்போது நாம் இஸ்ரேலிடம் இருந்து பயங்கரவாதத்துக்கு எதிராக நகரங்களை ஏப்படிக் காப்பாற்றுவது என்று கற்க வேண்டும் என்று சொல்லத் தொடங்கி உள்ளனர். அடடா, தனக்கு வந்தால்தான் தலை வலியும் காய்ச்சலும் என்னவென்று தெரியும் என்று நம் ஊர்ப் பெரிசுகள் சொல்வதுதான் எவ்வளவு உண்மை!

அதே நேரம் இஸ்ரேலில் என்னவென்று பார்த்தால், அங்கு அரசை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் ஒரு எதிர்க்கட்சி வேட்பாளர் சொல்கிறார், பயத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தை வெல்லும் அரசியலை ஒழித்துக் கட்டி, மக்கள் சுதந்திரமாக உலவும் அரசியலைப் பீடமேற்றுவோம் என்று குரல் கொடுக்கிறார்.




பயங்கரவாதிகளின் தாக்குதல்கள்.

இவற்றுக்கு எதிரான தடுப்பு முயற்சிகளில் குடியேறிகளைக் கடும் சோதிப்புக்கு உள்ளாக்குதல், கூடிய மட்டிலும் உள்ளேயே நுழைய விடாமல் இருத்தல், ஏற்கனவே உள்ளே வாழ்பவர்களுக்கு இடையூறுகளைக் கொடுத்து அவர்கள் மனம் தளர்ந்து தம் முன்னாள் நாடுகளுக்குத் திரும்பலாமா என்று யோசிக்க வைத்தல், யூதர்களைத் தாக்குவோரைக் கண்டு கொள்ளாமல் விட்டு, யூதர்களை ஐரோப்பாவிலிருந்து ஓடிப் போகலாம் என்று எண்ண வைத்தல்....

ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் என்று பல பொதுப் போக்குவரத்துக்கான இடங்களில் மேற்கொள்ளத் துவங்கி இருக்கின்றது.

தொலைபேசித் தொடர்புகள், வலையுலக சஞ்சாரம் ஆகியனவும் நேரடிக் கண்காணிப்பிலும், மறைமுகக் கண்காணிப்பிலும் இருக்கின்றன. பொலிஸாருக்கு கிட்டத் தட்ட இராணுவ வீரர்களுக்கு இருப்பது போன்ற ஆயுதங்களும், தாக்குதலில் அதே போன்ற பயிற்சிகளும்

ஐசக் ஹெர்ஸாக் என்ற எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார், அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை மறுபடி கொளுத்துவோம் என்று. அமைதிக்கான பேச்சுவார்த்தை என்பது ஏதோ சொக்கப்பனை போல ஹெர்ஸாக் அதை உருவகிக்கிறாரா என்று தெரியவில்லை. அல்லது இஸ்ரேலையே கொளுத்துவோம் என்று சொல்கிறாரோ?

(மகரந்தம்)

# பரீட்சையை எதிர்கொள்வது எப்படி?

– எஸ். ஜெயவாணி –

எவ்வளவு தான் சிறப்பாக படித்திருந்தாலும், பரீட்சை நாள் நெருங்க நெருங்க பெரும்பாலான மாணவ - மாணவியருக்கு பயம், பதற்றம் என்பன ஏற்பட்டு, படித்ததெல்லாம் மறந்து விடும் நிலைமைக்கு ஆளாகின்றனர். இது, முழுக்க முழுக்க தவிர்க்கப்பட வேண்டியது. தன்னம்பிக்கையை வளர்த்து, வெற்றி பெற, கீழே உள்ள, குறிப்புகள் உங்களுக்கு பயன்படும்.

✷ திட்டமிடாமல் கடைசி நேரத்தில் படிப்பது மற்றும் அவசரப்படுவது, டென்ஷனைத் தான் உருவாக்கும்.

✷ உங்கள் இலட்சியங்களையும், ஒளிமயமான எதிர்காலத்தையும், ஞாபகத்தில் வைத்துக் கொண்டால், படிக்க வேண்டும் அதிக புள்ளிகள் பெற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டுவிடும்.

✷ ஒருநாள் முழுவதும் படிக்க வேண்டியவற்றை பட்டியலிட்டு, உடனே படிக்க வேண்டியதை அவசரம் என்றும், உடனே படிக்க வேண்டாததை, முக்கியம் என்றும் குறியுங்கள். அவசரம் என்று இருப்பதை அதிகாலையிலும், முக்கியமானதை மாலையிலும் படிக்கலாம்.

✷ பயம் உங்கள் உடல் மற்றும் மனதை செயல் இழக்கச் செய்வதுடன், தூக்கமின்மை, தாழ்வு மனப்பான்மை, அவநம்பிக்கை மற்றும் எதிர்மறை எண்ணங்களை உருவாக்கி, உங்களை அழித்து விடும். அதனால், பயத்தை விட்டொழியுங்கள்!


✷ எவ்வளவு புத்திசாலித்தனமாக திட்டமிட்டாலும், நேரம் வீணாவது என்னவோ நடந்து கொண்டு தான் இருக்கும். அதனால், பாடங்களை பகிர்ந்தளித்து நேரத்தை மிச்சப்படுத்துங்கள். .

✷ படிப்பதற்கு அதிகாலை நேரமே ஏற்றது. அதிகாலைப் பொழுதில் மனமும், உடலும் மிகவும் ஒன்றிணைந்து இருக்கும்.

✷ பொதுவாக, இரவில் அதிகபட்சம், 11:00 மணி வரை படிக்கலாம் பின், ஐந்து மணி நேரம் நிம்மதியான தூக்கம். அதன்பின், அதிகாலை 4:00 மணிக்கு எழுந்து படிக்கும் போது, மனதில் பாடங்கள் பசுமரத்தாணி போல பதியும்.

✷ நாள் முழுவதும் படித்தாலும், முக்கியமற்ற பாடங்களுக்காக நேரத்தை செலவிட்டால், அதில் எவ்வித பயனும் ஏற்படாது. எனவே, எந்தப் பாடங்கள் முக்கியம், எந்தப் பாடங்கள் உங்களுக்கு எளிமை, கடினமான மற்றும் புரியாத பாடங்கள் எவை என்று கண்டறிந்து, திட்டமிட்டு நேரத்தை செலவிடுங்கள்.

✷ ஒரு பாடத்தை படிக்கும் போது, மொத்தமாக படிக்காமல், அதை பல பிரிவுகளாக பிரித்து, சிறு சிறு தலைப்புகளைச் சூட்டி, அதை குறிப்புகளாக தயாரித்து படிக்கலாம். அக்குறிப்புகள் அப்பாடத்தின் கருத்தை எளிதில் ஞாபகத்திற்கு கொண்டு வருவதுடன், பரீட்சை நேரத்தில் எளிதில் ஞாபகத்திற்கு வரும்.



✷ கண்டிப்பாக எந்த ஒரு செயலையும் தொடர்ந்து செய்யக் கூடாது. படிக்கும் போது ஒவ்வொரு மணி நேரத்துக்கும், ஐந்து நிமிடம் இடைவெளி கொடுக்கலாம். தொடர்ந்து படிப்பதால், மூளை எளிதில் சோர்வடைந்து விடும். திறந்த வெளி அல்லது ஜன்னலின் ஓரம் நின்று, நன்றாக மூச்சை இழுத்து, மூச்சுப் பயிற்சி செய்யுங்கள். காலாற நடந்த பின்போ, உங்களுக்கு பிடித்தமான இசையை கேட்ட பின்போ படிக்கலாம்.

✷ கீரைகள், பழங்கள், காய்கறிகள், கொண்டைக் கடலை, பேரீட்சை, பசும் பால் ஆகியவற்றை பரீட்சை காலத்தில், கட்டாயம் உண்ண வேண்டும்.

✷ மாணவர்கள் படிக்கும் போது அமைதியான, நிசப்தமான சூழ்நிலை தேவை. அதனால், பெற்றோர், மாணவர்களின் கவனத்தை களையும் வகையிலான, தேவையற்ற சத்தத்தை வீட்டில் குறையுங்கள்.

✷ பரீட்சை நாளில் எளிய உடற்பயிற்சிகள், நடைப்பயிற்சிகள் மற்றும் யோகா பயிற்சிகளை, 10 நிமிடங்கள் செய்யுங்கள். பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் மாதவிலக்கு வயிற்று வலியும், அதிக ரத்தப் போக்கும் பரீட்சை பயத்தில் அதிகமாகலாம். இது, உடல் மற்றும் மனநிலையை பாதிக்கும் என்பதால், முதலிலேயே மருத்துவரை சந்தித்து, ஆலோசனை பெறுவது அவசியம்.


✷ பரீட்சை மண்டபத்தில் உண்டாகும் மன பதற்றம். கை, கால் வியர்வை, நடுக்கம், பய உணர்வு போன்றவைகளை தவிர்க்க வேண்டும். ஒரு சில நிமிடங்கள் கண்களை மூடி, "நான் அமைதியாக பயமில்லாமல், உற்சாகமாக இருக்கிறேன் பரீட்சையில் வெற்றி பெறுவேன்..." என்று நிதானமாக மனதிற்குள் கூறினால், படபடப்பு குறையும். கைகளை ஐந்து முறை இறுக்கமாக மூடித் திறவுங்கள்; கழுத்து, தோள்பட்டையை தளர்த்துங்கள்; இப்போது, உங்களுக்குள் ஒரு உற்சாகம் பிறக்கும்.

✷ கேள்வித்தாளை பதற்றமில்லாமல், அமைதியாக வாசியுங்கள். நன்றாக தெரிந்த பதில்களை முதலில் எழுதுங்கள். ஒவ்வொரு கேள்விப் பகுதிக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்று திட்டமிடுங்கள். எதிர்பாராத பகுதியிலிருந்தோ, படிக்காத பகுதியிலிருந்தோ கேள்விகள் வந்திருந்தால், மனம் பதற வேண்டாம்.

✷ கேள்விக்கு தகுந்த பதிலை சுற்றி வளைக்காமல் எழுதுங்கள். படித்ததையெல்லாம் எழுதிவிட வேண்டும் என்று எழுதாதீர்கள். இறுதியில் எழுதியவற்றை சரி பார்க்க, முதலிலேயே நேரம் ஒதுக்குங்கள். மறக்காமல் சுட்டெண், பக்கம் எண், கேள்வி எண் எழுதுங்கள். இறுதியில், விடைத்தாள்களை சரிபார்த்து இறுக்கமாக கட்டுங்கள்.

நீங்கள் வெற்றி பெற திட்டமிட்டதற்கு பின், வேண்டாத சிந்தனைகளை தூக்கி எறியுங்கள். தோல்வி கண்டவர்களை பார்க்காதீர்கள் வெற்றியாளராக மாறுங்கள்.

# சினிமா சினிமா



❈ சமூக சேவை மற்றும் கலைத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு மலேசிய அரசு, “டத்தோ” விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இதுவரை ஹொலிவுட் நடிகர் ஜாக்கிசான், நடிகை மிச்செல்லியோ மற்றும் பொலிவுட் நடிகர் ஷாருக்கான் ஆகியோர் இவ்விருதை பெற்றுள்ளனர். இப்போது, “நடிகர் ரஜினிகாந்துக்கும் அந்த உயரிய விருதை மலேசிய அரசு வழங்க வேண்டும்...” என்று, அங்குள்ள ரஜினி ரசிகர்கள் கையெழுத்து இயக்கம் நடத்தி வருகின்றனர்.

❈ பிரபல எழுத்தாளர் ராஜேஷ்குமார், இதுவரை, 1,500க்கும் மேற்பட்ட நாவல்களும், ஆயிரக்கணக்கான சிறுகதைகளும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, “சிறுவாணி” மற்றும், “அகராதி” போன்ற நாவல்கள், ஏற்கனவே படமாக்கப்பட்டுள் ளன. தற்போது, இவரது, “இரண்டாயிரம் அடி சொர்க்கம்“ என்ற நாவலும் படமாகிறது. ஹிந்தியில், அக்ஷய் குமாரை வைத்து பிரபுதேவா இயக்க விருக்கும் புதிய படமும், ராஜேஷ்குமார் எழுதிய “வெல்வெட் குற்றங்கள்” என்ற கதைதான்.

❈ மக்களின் பேராதரவைப் பெற்ற படங்கள் “ரீமேக்” என்ற பாணியில் அதே களத்துடன் வெவ்வேறு நடிகர்களின் பங்களிப்பில் உருவா-வது வழக்கம். “ரீபூட்” என்பது அதே மையக் கருவை வைத்துக் கொண்டு கதையின் போக்கு, திரைக்கதை, காட்சிகள், நடிகர்கள், கதாபாத்திரங்கள் என எல்லாவற்றையும் காலத்துக்கு ஏற்ப மாற்றி உருவாக்குவது. “ஹல்க்”, “சூப்பர் மேன்”, “பேட் மேன்”, “ஸ்பைடர் மேன்”, “டெர்மினேட்டர்” போன்ற பல படங்கள் “ரீபூட்” முறையில் மறு உருவாக்கம் பெற்று ஹொலிவுட்டில் வெற்றி பெற்று வருகின்றன. அதேபோல் ஹோலிவுட்டில் மணிவண்ணனின் “நூறாவது நாள்” “ரீபூட்” செய்யப்படுகிறது. இயக்குவது மணிவண்ணனின் மகன் ரகுவண்ணன். “சதுரங்க வேட்டை” நட்ராஜ் கதாநாய கனாக நடிக்கிறார். ஏ.ஆர். ரஹ்மானின் மாணவர் நிரோ பிரபா இசையமைக்கிறார்.
















❈ ஏ.ஆர். ரஹ்மான் குடும்பத்திலிருந்து மீண்டும் ஒரு இசைக்கலைஞன் உருவாகிறார். ரஹ்மானின் சகோதரி ஏ.ஆர்.ரெஹனா “கன்னத்தில் முத்தமிட்டால்” படத்தின் மூலம் பாடகியாக அறிமுகமானார். வெயில் படத்தின் மூலம் ரெஹனாவின் மகன் ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைப்பாளரானார். இப்போது ரஹ்மானின் மற்றொரு தங்கை மகனான இ.ஆர்.அசார் காஷி.்.ப் “கண்ணாலே” என்ற மியூசிக் விடியோ மூலம் இசையுலகில் தனது பயணத்தைத் தொடங்கியிருக் கிறார். பிரபல பாடகர் ஜாவேத் அலி மற்றும் பாடகர் ஸ்ரீநிவாஸின் மகள் சரண்யா ஸ்ரீநிவாஸ் பாடியுள்ளனர்.

❈ “கடல்” படத்துக்குப் பின் மணிரத்னம் இயக்கும் படத்துக்கு “ஓகே கண்மணி” என பெயர் வைக்கப்பட்டது. பின்னர் அது “ஓ காதல் கண்மணி” என மாற்றப்பட்டுள்ளது.

முழுக்க முழுக்க காதலை மையப்படுத்திய கதை. மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான், நித்யாமேனன் நடிக்க பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.

❈ நடிகைகளைப் பொறுத்தவரை, வீட்டை விட்டு வெளியே தலை காட்டினாலே, மேக்கப் போட்டுக் கொண்டு தான் வருவர். ஆனால், காஜல் அகர்வால் அப்படியில்லை. சினிமாவில் நடிப்பது தவிர, மற்ற நேரங்களில் அவர் மேக்கப் போட்டுக் கொள்வதில்லை. காரணம் கேட்ட போது, “நான் இயற்கையிலேயே அழகான பெண்; எனக்கெதற்கு மேக்கப்” என்கிறார். அட!

❈ “பெட்டிக்கடைக்கு இன்று விடுமுறை” என்றொரு படம். முக்கிய கதாபாத்திரத்தில் இயக்குனர் சமுத்திரக்கனி நடிக்கிறார்.

❈ த்ரிஷாவுக்கு ஏழு கோடி ரூபாய் மதிப்பில், கார் ஒன்றை பரிசளித்துள்ளார், அவரது வருங்கால கணவரான வருண் மணியன்.

❈ சிம்பு, நயன்தாரா இணைந்து நடித்து வரும், இது நம்ம ஆளு படத்தில், கௌரவ வேடத்தில் நடித்துள்ளார் ஜெய்.

❈ ஜெயம் ரவியுடன், எங்கேயும் காதல் படத்தில் நடித்த ஹன்சிகா ரோமியோ ஜூலியட் படத்திலும் நாயகியாக நடிக்கிறார். காதல் கதை என்பதால், ஒரு காட்சியில் உதட்டு முத்தமும் இடம்பெற்றுள்ளதாம்!

❈ காக்கி சட்டை படத்துக்கு பின், தன் படக் கூலியை தடாலடியாக உயர்த்தியிருக்கிறார் ஸ்ரீதிவ்யா.

❈ திரு இயக்கும் புதிய படத்தில் ஜெய்யின் அண்ணனாக பிரபுதேவா நடிக்கவுள்ளார். இப்படத்தில் ஜெய் - த்ரிஷா ஜோடியாக நடிக்கின்றனர்.

❈ “கத்தி” படத்தில் விஜய்க்கு தங்கையாக நடித்த அனுகிருஷ்ணா “வெள்ள காக்கா மஞ்ச குருவி” படத்தின் மூலம் கதாநாயகியாகிறார்.

❈ அதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் “த்ரிஷா இல்லேன்னா நயன்தாரா” படத்தில் சிம்ரன் ஒரு பாத்திரத்தில் நடிக்கிறார்.

# குழந்தைகளுக்கான கூகுள் சேவை!



அவ்வப்போது ஏதேனும் புதுமையான வசதிகளைத் தன் வாடிக்கையாளர்களுக்குத் தருவது, கூகுள் நிறுவனத்தின் வாடிக்கை. அந்த வகையில், கடந்த 23ஆம் திகதி, குழந்தைகள் பாதுகாப்பாகப் பயன்படுத்தவென, யுட்யூப் கிட்ஸ் (YouTube Kids) என்ற பெயரில் அப்ளிகேஷன் ஒன்றை, அன்ட்ரோய்ட் மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் இயங்குவதற்கென தயாரித்து வழங்கியுள்ளது. குழந்தைகள் மற்றும் சிறுவர்களை இலக்காகக் கொண்டு இந்த அப்ளிகேஷன் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூகுள் அறிவித்துள்ளது. இதன் மூலம், சிறுவர்கள், தாங்கள் தேடி அறிய விரும்பும் தளங்களைப் பாதுகாப்பாகவும், எளிதாகவும் பெற முடியும். இந்த அப்ளிகேஷன் மூலம் இணையத்தளத்தில் தேடுகையில், சிறுவர்கள் பார்க்கக் கூடாத தளங்கள் மறைக்கப்படும். குழந்தைகளும், சிறுவர்களும் பார்க்கக் கூடிய, தேடப்படும் பொருள் சார்ந்த தளங்கள் மட்டுமே காட்டப்படும்.

இந்த அப்ளிகேஷனில் மூன்று சிறப்பம்சங்கள் உள்ளன:

1. பளிச் என்ற பெரிய படங்கள்: மிகப் பெரிய அளவிலான ஐகொன்கள், அதைக் காட்டிலும் பெரிய படங்கள் காட்டப்படுவதால், குழந்தைகள் மிக எளிதாக, படங்களை, ஐகொன்களைத் தேர்ந்தெடுக்கலாம். இதில் ஒலி வழி தேடல் (voice search) என்னும் டூல் இருப்பதால், குழந்தைகளுக்குச் சரியாக தட்டச்சு செய்யத் தெரியாவிட்டாலும், தங்களுக்குத் தேவையானவற்றைக் குரலில் வெளிப்படுத்தியும், பிரியப்பட்ட வீடியோவினைத் தேடிப் பெறலாம் என கூகுள் அறிவித்துள்ளது.

2. குடும்பத்தை மையமாகக் கொண்ட தகவல்கள்: இந்த புதிய டூல், குடும்பங்களை மையமாகக் கொண்ட தகவல்களைத் தருகிறது. எனவே, குழந்தைகளும், சிறுவர்களும் பார்க்கக் கூடிய படங்கள் மட்டுமே காட்டப்படும் என்பதால், பெற்றோர்கள் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம். அத்துடன், கூகுள் சிறுவர்களுக்கான வீடியோ படங்கள் தயாரிப்பவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, தொடர்ந்து வீடியோ படங்களை அப்லோட் செய்திட வழி மேற்கொண்டுள்ளது.

3. பெற்றோர்களின் கட்டுப்பாடு: யுட்யூப் கிட்ஸ் டூல், பெற்றோர்கள் மேற்கொள்ளக் கூடிய கட்டுப்பாட்டிற்கான வழிகளுடன் (parental control), குழந்தைகளிடம் டப்ளட் பி.சி.க்களைத் தரும் முன், அவர்கள் பார்க்கக் கூடிய நேரத்தினை அமைத்துவிட்டுத் தரலாம்.

அது மட்டுமின்றி, தேடல் சாதனத்தின் இயக்கத்தினையும் குறிப்பிட்ட நேரத்திற்கு முடக்கி வைக்கலாம். இந்த டூல் தொடர்ந்து, மேலும் பல வசதிகளைத் தரும் வகையில், மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மூங்கில் அரிசி!

மூங்கில் ஒரு சுற்றுச் சூழல் நண்பன். ஒரு மூங்கில் மரம் தனது வாழ்நாளில் 450 தொன் காபனீரொட்சைட்டை உறிஞ்சி, ஒட்சிசனை வெளியிட்டுக் காற்றைச் சுத்தமாக்குகிறது. 12 ஆண்டுக்ளுக்கு ஒருமுறை குறிஞ்சி மலர் பூக்கும். மூங்கிலோ 40 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பூக்கும். மூங்கில் பூவுக்குள் அரிசி இருக்கும். 100 கிராம் மூங்கில் அரிசியில் 60.36 கிராம் காபோவைதரேற்றும், 265.6 மி.கிராம் கலோரிகளும் உள்ளன. மூங்கில் அரிசி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். உடலை வலுவாக்கும்.

மூங்கில் அரிசியையும், குருத்தையும் உணவாக உட்கொண்டால், நீரிழிவு நோயால் உருக்குலைந்த உடல் கூட உறுதி பெறும். நார்ச்சத்துகள் அதிகமிருப்பதால், நீரிழிவு நோய், புற்றுநோய், இதய நோய்கள், மலச்சிக்கல் எல்லாவற்றுக்கும் மூங்கில் அரிசி எதிரி. கொழுப்புச் சத்தைக் குறைக்கும். புண்களை ஆற்றும். அல்சர் வராது. நரம்புத் தளர்ச்சியைப் போக்கும்.

மூங்கில் அரிசி எங்கே கிடைக்கும் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?




# மாத்திரைகளை எப்படிச் சாப்பிட வேண்டும்?

மாத்திரைகள் எப்போது, எப்படி? சாப்பிட வேண்டும் என்பது குறித்து ரஷ்ய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து ஒரு முடிவான கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.

மாத்திரைகளை பால் அல்லது பழச்சாறு, கோப்பி, தேநீர், இவற்றுடன் சேர்த்து விழுங்கக் கூடாது. மாத்திரைகள் உடலில் கிரகிக்கப்படுவதை இவை தாமதப்படுத்துகின்றன.

சாதாரணமாகத் தண்ணீருடன் சேர்த்து மாத்திரைகளைச் சாப்பிடுவது நல்ல பலனைக் கொடுக்கும். சாப்பாட்டுக்குப் பின் உடனடியாக மாத்திரைகளை விழுங்க வேண்டாம். சாப்பாட்டுக்கு முன்னரோ அல்லது சாப்பாடு சாப்பிட்ட சிறிது நேரத்திற்குப் பின்னரோ மாத்திரைகளைச் சாப்பிடுங்கள். மதுவுடன் சேர்த்து மாத்திரைகளைச் சாப்பிடவே கூடாது.



# இரண்டு வருடங்களின் பின் மின் கட்டண பற்றுச்சீட்டு

## செலுத்தமுடியாது சிரமத்தில் மக்கள்

(மல்லாவி)

மல்லாவி வவுனிக்குளம் பகுதியிலுள்ள மக்களுக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வழங்கப்பட்ட மின்சார இணைப்புக்களுக்கான கட்டணப்பற்றுச்சீட்டு கடந்த மார்கழி மாதம் 24,400 ரூபா என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மல்லாவி கொல்லவராயன் குளப் பகுதியில் நீண்ட காலமாக மின்சார வசதிகள் எதுவுமின்றி பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்த நிலையில் தமக்கு மின்சார இணைப்பு வழங்கும்படி மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மல்லாவி மின்சார சபையினால் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த மின்சார இணைப்புக்கான கட்டணப் பற்றுச்சீட்டு எதுவும் மாதாந்தம் வழங்கப்படவில்லையெனத தெரிவிக்கப்படுகின்றது.


அதன் பின் இரண்டு வருடங்கள் கழித்து கடந்த 2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நா.இந்திரகுமார் பிறேமிலா என்பவருக்கு 24,400 பெறுமதி குறிப்பிட்டு மின்சாரத்துக்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கடந்த ஜனவரிமாதம் குறித்த பற்றுச்சீட்டுக்கான சிவப்பு அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பற்றுச் சீட்டுக்கான உரிமையாளர் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன் பணத்தைக் கட்ட முடியாது கஷ்ரப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மின்சார சபை அதிகாரிகளிடம் கேட்ட போது தமக்குக் கிடைக்கும் போது மட்டுமே பற்றுச்சீட்டை வழங்க முடியுமென பொறுப்பற்ற விதமாக பதலளித்துள்ளார்.

அன்றாட வாழ்வுக்கே சிரமப்பட்டு வரும் இந்த மக்களிடம் உடனடியாக இரண்டு வருடத்துக்கான கட்டணத்தையும் செலுததுமாறும் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் எனத் தெரிவிக்கும் மக்கள் தமக்கு உரிய தீர்வினை வழங்க அதிகாரிகள் முன்வர வேண்டுமென கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (81)

# பூட்டப்பட்டுள்ள எரிபொருள் நிலையத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவர வேண்டும்




கடந்த 20 நாட்களாக வேலணை எரிபொருள் நிலையம் பூட்டிய நிலையில் காணப்படுகின்றது. இந்த எரிபொருள் நிலையமானது வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமானது நிர்வாகத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலையால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், சுற்றுலாப் பயணிகள், உள்ளூர்வாசிகள் மற்றும் பலதரப்பட்டோர் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தீவகம் தெற்கு பிரதேசத்தில் அதாவ்து வேலணையில் ஒரேயொரு எரிபொருள் நிலையம் இதுவென்பது குறிப்பிடதக்கது உரிய அதிகாரிகள் கவனமெடுத்து எரிபொருள் நிலையத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# புங்குடுதீவு மடத்து வெளிப்பகுதியில் இயந்திரம் மூலம் நெல் அறுவடை



யாழ்.தீவகம் புங்குடுதீவு மடத்துவெளி கம்பிலியன் பகுதியில் நவீன இயந்திரத்தின் மூலம் நெல அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீவகப் பகுதிகளில் காலங்காலமாக மனித வலுவின் மூலமே நெல் அறுவடை செய்யப்படுவது வழமையான ஒன்றாக இருந்த போதிலும் கால மாற்றத்தினாலும் தொழிலாளர்களின் பற்றாக் குறையாலும் இயந்திரத்தின் மூலம் நெல் அறுவடை செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகவே கருதப்படுகின்றது.

தீவகத்தில் புங்குடுதீவு மடத்துவெளிப்பகுதியிலேயே முதன் முதலில் இயந்திரத்தின் மூலம் நெல் அறுவடை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஆரிய குளத்தை அழகுபடுத்த ஆவன செய்ய வேண்டும்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மையப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஆரியகுளம் இயற்கையாகவே மாரி காலங்களில் ஓரளவு அழகாக காட்சி அளித்தாலும், ஒரு குளத்திற்கு அமைய வேண்டிய எதுவித அழகான தோற்றமும் இந்த குளத்திற்கு இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என குற்றம் சாட்டப்படுகின்றது.

தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள கங்காராமவும் கிட்டத்தட்ட இதை ஒத்த ஒரு நில நீர் அமைப்பாகும். இது சிங்கப்பூர் போன்ற வளர்ந்த நாடுகளின் பகுதிகளில் இருந்திருந்தால் எவ்வளவோ அழகான மற்றும் ஒரு பயனுள்ள பகுதியாக மாற்றப்பட்டிருக்கும்.

சுமார் 1000 சதுர மீற்றர் பரப்பளவுடைய இந்த குளம், வடகீழ் பருவபெயர்ச்சி காலநிலையின் போது அதிகளவு நீரினை பெறுகின்றது. அதுமட்டுமன்றி யாழ்.நகர பகுதியில் அமைந்துள்ளதாலும் நாக விகாரைக்கு முன்பாக அமைந்துள்ளதாலும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கும் கமராக்களுக்கும் தப்பாத ஒரு இடமாக இது விளங்குகின்றது.

எனவே இந்த ஆரிய குளத்தினையும் அதனைச் சூழவுள்ள பகுதியையும் அழகுற மேன்மைப்படுத்த வேண்டுமென நலன் விரும்பிகள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க நடவடிக்கை

## 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் (க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள 2015.10.30 ஆம் திகதி 16 வயது பூர்த்தியடைந்த பாடசாலை மாணவர்களை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான நடவடிக்கைகளை பாடசாலை அதிபர்கள் விரைந்து முன்னெடுக்குமாறு ஆட்பதிவு திணைக்கள ஆணையாளரினால் அறிவறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பொதுப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை தொடர்பில் பல்வேறு நெருககடி நிலைகள் ஏற்பட்டன அதனை தவிர்க்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதாகவும் பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பாடசாலை மாணவர்களின் புதிய விண்ணப்பப்படிவத்திற்கான அடையாள அட்டை தயாரிக்கப்படுவதுடன் விசேட தேர்தல் காலங்களில் திருத்தப்பட்ட பதிலீட்டு அடையாள அட்டை விணணப்பப் படிவங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதனை அடுத்தே மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலும் பாட்சையின் போது ஏற்படும் நெருக்கடிகளை தவிர்க்கும் வகையிலும் விரைந்து அடையாள அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் விண்ணப்பத்தை எவ்வாறு பூரணப்படுத்த வேண்டும் புகைப்படம் தொடர்பில் பாடசாலைகளுக்கு சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதன்பிரகாரம் விண்ணப்பத்தை அனுப்பிவைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (66)

## ஊழியர் சேமலாப நிதிக்கான மாபெரும் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமாக தொழில் திணைகளமும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து நடாத்தும் மாபெரும் நடமாடும் சேவை எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண தொழில் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது என வடமாகாண பிரதி தொழில ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(04.03.2015 புதன்கிழமை)

ஐய வருஷம் மாசி மாதம் 20 ஆம் திகதி.
சதுர்த்தசி - திதி. சித்தம் - யோகம்.
ஆயிலிய நட்சத்திரம் காலை 06.49 வரை. பின் மகம்.
இராகு காலம் 12.26 - 01.56 வரை. சுபநேரம் 04.56 - 06.26 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: சுகாதாரப் பகுதியினர் சல்லடை போட்டுத் தேடியதால் பதகளிப்பும் அச்சமும் ஏற்படல்.

**ரிஷபம்**: நேர்மறை எண்ணங்களால் சூழ நிலை சாதகமாக அமையும்.

**மிதுனம்**: "ஈகோ" மனப்பாங்கினால் குடும்பத்தில் பிரளயம் தோன்றிப்பின் சுமுகமடைதல்.

**கடகம்**: கிரக சாந்தி செய்து விவாகத் தடைநீங்க முயற்சி எடுத்தல்.

**சிம்மம்**: கௌரவக் குறைவினால் பங்குத்தொழிலைக்கைவிட்டு தனித்தியங்க விரும்புதல்.

**கன்னி**: சனீஸ்வரன் சாதக நிலையில் இருப்பதினால் கைவிட்டிருந்த பயணத்தை ஆரம்பித்தல்.

**துலாம்**: எதிரியைக் கண்டவிடத்து சச்சரவு தோன்ற முன் சென்றுவிடல்.

**விருச்சிகம்**: சில்லறைத்தட்டுப்பாட்டினால் நடத்துனருடன் தகராறு முளை விடல்.

**தனுசு**: திகதி தப்பிய மருந்துவில்லைகளைப் பாவிக்க முயன்றவேளை மனையாள் தடுத்துவிடல்.

**மகரம்**: நிலுவை கட்டத்தவறியதால் தொடர்புகள் தற்காலிகமாகத் துண்டித்தல்.

**கும்பம்**: காரியம் முடிந்ததும் கைவிட்டுச் சென்றவரை எண்ணிக் கவலைப்படல்.

**மீனம்**: அனுபவமில்லாத தொழிலில் ஈடுபட முயல்வதை பெற்றோர் விரும்பாமை.

# திருக்குறளுக்கு தனித்துறை அமைப்பதால் தமிழின் பெருமையை வெளிப்படுத்தமுடியும்

## கம்பவாரிதி ஜெயராஜ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்திலே திருக்குறளுக்கு தனியான துறை ஒன்றை அமைப்பதன்மூலம் தமிழின் பெருமையை உலகறியச் செய்ய முடியும்.

இவ்வாறு அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்திய வித்தகம் சிந்தனையரங்குக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்திய கம்பவாரிதி இ. ஜெயராஜ் தெரிவித்தார்.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் கடந்த சனிக்கிழமை திருமதி விஜயரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கம்பவாரிதி இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

திருக்குறள் உலகப்பொதுமறை அதனை எமது இனம் சரியாகப் போற்றவில்லை உலக அரங்கில் தமிழர் தலைநிமிர்ந்து வாழ அந்த ஒரு நூலே போதும்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடுஎன்று தமிழ்நாட்டின் பெருமையைப் பேசுகிறான், பாரதி அவன் போற்றிய வள்ளுவன் தந்த குறள் எக்காலத்துக்கும் எந்த இடத்துக்கும் பொருந்தக்கூடிய நூல் ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும் நூல். திருக்குறளிலே வள்ளுவர் மருந்து என்று ஒரு அதிகாரம் வைத்திருக்கிறார் நவீன விஞ்ஞான மருத்துவம் வளர்ச்சியடைந்துள்ள இந்தக்காலத்திற்கும் அது பொருத்தமாக அமைந்துள்ளது.

இன்று மருத்துவத்திலே புதிய ஆய்வுகளைக் கொண்ட நூல்கள் வெளிவருகின்றன. நாளைக்கு இன்னொரு மருந்து கண்டுபிடிக்கப்படும்போது அது பழைய நூலாகி விடுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய திருக்குறள் இன்னும் என்றும் நிலைத்து நிற்கிறது. என்றார்.

எமக்கு மொழிப்பற்று அதிகம் அதனால் திருக்குறளை தமிழ்நூல் என்ற எல்லைக்குள் அடக்கி விட்டோம் அது எல்லாமொழிகளிலும் வெளிவந்து உலகப் பொது நூலாக விளங்கவேண்டும். இலக்கியங்கள் எப்பொழுதும் எமது வாழ்வைச் செம்மைப்படுத்தும் திருக்குறளைப் படிக்கும் ஆர்வத்தை இளையதலைமுறையினரிடையே ஏற்படுத்தவேண்டும்.

உலகத்தில் தருமத்தைப் பரிபாலிப்பவன் இறைவன் அரசனுக்கு இறை என்ற பெயரும் உண்டு ஆட்சித்தலைவனாக வருபவன் கல்வி, கேள்வி, அறிவு ஒழுக்கமுள்ளவனாக இருக்க வேண்டும் அத்தகையவர்களையே மக்கள் தங்கள் ஆட்சித் தலைவனாக தெரிவு செய்ய வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

வித்தகம் சிந்தனை அரங்கு இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது. குறள்காட்டும் அரசன் என்ற பொருளில் இரா.செல்வவடிவேல் குறள்காட்டும் அமைச்சன் என்ற பொருளில் ச.மார்க்கண்டு, குறள்காட்டும் குடிகள் என்ற பொருளில் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (10)

# பாலைதீவு அந்தோனியார் திருவிழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆரம்பம்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இவ் ஆலய திருவிழாவை நடாத்துவது தொடரபான ஏற்பாட்டுக் கூட்டம் மிக அண்மையில் நடைபெற்றது.

இதன்போது ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று பக்தர்களின் தேவைக்காக திறந்திருக்கும்.

கடற்போக்குவரத்தில் ஈடுபடும் கடற்கலன்கள் பக்தர்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பக்தர்கள் தங்கள் தேவைக்கு போதுமான குடிநீரை தாங்களே கொண்டு செல்லுதல் வேண்டும்.

பெறுமதி வாய்ந்த தங்க நகைகள் மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டு செல்வதனை தவிர்த்தல் வேண்டும்.

பச்சை குத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.சர்பத் தயாரித்து விற்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் ஆலய புனித பிரதேசத்திற்கான ஒழுங்கு நடைமுறைகளைப் பின்பற்றி சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

பொதுமக்களுக்கான அறிவுறுத்தல்களை செவ்வனே பின்பற்றி ஆலய உற்சவம் சிறப்பாகவும் அமைதியாகவும் நடைபெற பூரண ஒத்துழைப்பை நல்குமாறு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (90)

# குருதி தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய இந்துக்கல்லூரியில் இரத்ததான முகாம்



வரலாற்று பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறை வினை முன்னிட்டு இடம் பெறும் நிகழ்வுகளின் வரிசையில் சமூகப்பொறுப்புணர்வுடன் கூடிய செயற்றிட்டமாக இரத்ததான முகாம் கடந்த ஞாயிறறு கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டினை முன்னிட்டும் யாழ் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி வகைகளிற்கான தட்டுப்பாட்டை தொடர்ந்தும் இவ் இரத்ததானம் ஏற்பாடு செய்யப்பட்டது.

“ஒரு துளி உயிர் தரும்” என்ற தொனிப்பொருளில் ஒழுங்கமைக்கப்பட்ட இந் நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் மற்றும் பழையமாணவர்கள் பலர் ஆர்வதுடன் பங்குபற்றினர்.

இரத்ததான நிகழ்வுகள் யாவும் கல்லூரி கீதத்துடன் கல்லூரி பிரதி அதிபர் சதா நிமலனின் ஆசிச் செய்தியுடன் கல்லூரி யாழ். பழைய மாணவர் சங்கத் தலைவர் சுந்தரேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இச்செயற்பாடு மூலம் சமூகத்தின் அத்தியாவசிய இரத்த தேவையினை நிறைவேற்ற தம் பங்கினை யாழ். இந்து சமூகத்தினர்வழங்கியுள்ளமை குறிப்பிடதக்கதொருவிடயமாகும். (48)

# ஆயுர் வேதம்

## அத்தி இலை மாத்திரை!

அத்தி ஒரு சித்த மூலிகை அதனுடைய இலைகளின் மருத்துவ குணம் என்ன? அதை எப்படி தயாரித்துச் சாப்பிடலாம் எனப் பார்க்கலாம்.

**அத்தி இலைக் குடிநீர்:** ஒரு கைப்பிடி பச்சரிசியை சுமார் 2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து எடுத்துக் களைந்த கழுநீரை சுமார் 2 அவுன்ஸ் எடுத்து அதில் அத்தி இலை 40 கிராம், சீனி 20 கிராம் இவ்விரண்டையும் நன்கு அரைத்துக் கலந்து சிறிது நேரம் கழித்து வடிகட்டிக் கொள்ளவும்.

மலசுத்தி சரியாக ஆகாவிடில் இதிலேயே வேளைக்கு 5 – 10 மில்லி லீற்றர் ஆமணக்கெண்ணையைச் சேர்த்து கலக்கிச் சாப்பிடலாம். மலசுத்தியாவதற்கு ஏற்றவாறு சிற்றாமணக்கு எண்ணெய்யைக் கூட்டியோ குறைத்தோ உபயோகிக்கலாம். அல்லது செவதை வேர் 3 கிராம் அல்லது கடுக்காய்தோல் தூள் 5 கிராம் வரை சேர்த்துக் கொள்ளலாம்.

அதிகமாக சிறுநீர் வெளியாகும் போது காலை மாலை வெறும் வயிற்றில் 150 மில்லி லீற்றர் மோரில் 15 கிராம் அத்தி இலையைச் சேர்த்து அரைத்துக் கலக்கிக் குடிக்கலாம்.

மார்பு படபடப்பு, இதயநோய், மயக்கம், தலை சுற்றுதல், இரத்தக் கசிவு உபாதை இவை இருக்குமாயின் கொஞ்சம் பாலும், சீமைக் காஞ்சூரியும் (துரஞ்சபீன்), சேர்த்துக் கொள்ளலாம். பாலும் கழுநீரும் உலர்திராட்சையும் துரஞ்சபீனும் சேர்த்துக் கொடுக்க சிறுநீர் தாராளமாகப் பெருகி சிறுநீரகம் சுத்தமாகிறது.

சிறுநீரகச் சுத்தம், இரத்தக் கொதிப்படங்கி தெளிவடைதல், இதயத திற்கு பலம், மலசுத்தி, சிறுநீர்ப்பையில் ஏற்படும் கொதிப்படங்குதல் ஆகியவை இதன் குணங்கள்.

**அத்தி இலை மாத்திரை:** அத்தி இலையை நன்கு அரைத்து மாத்திரையாக்கிக் கொள்ளவும். வெயிலில் நன்கு காயவைத்துக் கொள்ளவும். அத்தி இலை பச்சையாகக் கிடைக்காவிடத்தில் இதை உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

பாலும் சீனியும் சேர்த்துச் சாப்பிட இதயப் படபடப்பு, கல்லீரல் கெடுவதால் ஏற்படும் வயிற்றுவலி, புளித்த ஏப்பம், உணவு செரிக்கும் தறுவாயில் ஏற்படும் வயிற்றுவலி போன்றவற்றுக்கு நல்லது.

புளித்த பித்தத்தினால் ஏற்படும் நெஞ்சு எரிச்சல், வயிற்றுவலி உள்ளவர்கள் பருப்பு வகைகளைச் சேர்க்கக் கூடாது. வயிற்றுவலி இல்லாதிருந்தால் பாசிப்பருப்பு வேக வைத்த தண்ணீரைக் குடிக்கலாம்.

வலி இருக்குமிடத்தில் அத்தி இலையை அரைத்துப் பூசி ஒத்தடம் செய்து மேலே துணிவைத்துக் கட்டவேண்டும். வலி நிற்கத் தாமதமானால் மணிக்கொரு தரம் இதே மருந்தை உள்ளுக்குச் சாப்பிடச் செய்யலாம்.

உணவு செரிக்காமல் வலி இருந்தால் வாயில் விரலிட்டு வாந்தி செய்து விடலாம். சாப்பாடு ஜீரணமாகும் வேளையில் ஏற்படும் வலிக்கு சாப்பிடுவதற்கு ஒரு மணி முன்னதாகவே ஒரு வேளை மருந்து சாப்பிடுவது நல்லது.

பேதி, கிராணி, இரத்தக்குறைவு இருக்கும்போது ஏற்படும் மலமிளகிப் போகுதல் போன்றவற்றுக்கு இதன் உபயோகம் நல்ல குணம் அளிக்கின்றது. நான்கு அத்தி இலை, மிளகு 2 (எண்ணிக்கையில்) இவற்றை அரிசிக் கழுநீர் விட்டு அரைத்துச் சிறிது கறியுப்பு சேர்த்து சுமார் 4 அவுன்ஸ் மோரில் கரைத்துத் துணியில் கசக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இதைத் தினம் 3 வேளை சாப்பிடவும். வயிறு உப்பியிருந்தால் அல்லது 3 நாட்களில் குணம் தெரியாவிட்டால் அவசியத்திற்கேற்றவாறு ஆமணக்கெண்ணெய் சேர்த்தும் சாப்பிடலாம்.

நரம்பெடுத்த அத்தி இலையை வாட்டி அரைத்து மிளகு, உப்பு, மோர் சேர்த்து சோற்றுடன் சாப்பிடலாம். இரவு பால் சோறுடன், வீக்கமிருந்தால் உப்பும் தண்ணீரும் நீக்கி பால்சோறு மாத்திரம் சாப்பிடலாம்.

இதில் சுகம் கிட்டாவிடில் அரை லீற்றர் தண்ணீரில் 100 கிராம் அத்தி இலையை அரைத்துக் கலக்கி வடிகட்டிச் சுட வைத்து இதமான சூட்டில் எனிமா கொடுக்கலாம். அவசியத்திற்கேற்றவாறு இதில் 15 – 30 மில்லி லீற்றர் ஆமணக்கெண்ணெய்யும் சேர்த்துக் கொள்ளலாம்.

பசி குறைவாக இருந்தாலும் இதே மாதிரி குடிநீர் தயாரித்துச் சாப்பிடலாம். அத்திப்பிஞ்சு விதைநீக்கிய கறி, துவரம் பருப்பு, பாசிப் பருப்பு இவற்றின் தண்ணீர் மட்டும் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டுக்கொண்டு எண்ணெய் நெய் சேர்க்காமலிருக்க லவண பாஸ்கரம் கந்தகத்ராவகம் போன்ற கடும் பாசனமருந்துகளை விட இதில் குணம் காணுகின்றது.

# தமிழ் மக்களின் சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்

- நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு -



(கிளிநொச்சி)

மாற்றம் என்பது தமிழ் மக்களின் சிந்தனைகளில் ஏற்பட வேண்டும் நீண்ட காலமாக தமிழ் மக்களின் மனங்களிலும், சிந்தனைகளிலும் மாற்றம் ஏற்படவில்லை, ஏற்படவிடவுமில்லை எனவே தமிழ் மக்களின் வாழ்க்கையிலும், நீண்ட கால பிரச்சினைக்கான தீர்விலும் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் முதலில் மக்களின் சிந்தனைகளில் ஏற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளு மன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி அம்பாள்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்ககள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

உண்மையிலேயே மாற்றம் என்பது தென்னிலங்கையில் ஏற்படுவது முக்கியமல்ல தமிழ் மக்களிடம் ஏற்பட வேண்டும் தமிழரின் அரசியலில் ஏற்பட வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக தமிழரின் அரசியலில் எவ்வித மாற்றமுமின்றி தொடர்கிறது இது தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினையான அரசியல் பிரச்சினையிலும் தீர்வின்றிச் செல்வதற்கும் வழிவகுத்துள்ளது.

அரசு தற்போது தேசிய ஆலோசனை சபை ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தச் சபையானது தற்போது நாட்டில் அமைச்சரவையை விட அதிகாரமிக்கது. அந்தச் சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் இருக்கின்றார். நாட்டில் காணப்படுகின்ற பிரதான, முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்தச் சபையே ஆராய்ந்து தீர்வு காண்பதற்கான வழியை ஏற்படுத்தி வருகிறது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தச் சபையை உரிய முறையில் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை தேசிய ஆலோசனை சபையின் கடந்த இரண்டு கூட்டத்திற்கும் சம்மந்தன் செல்லவில்லை இதனால் அன்றைய தினம் ஆராயப்பட இருந்த தமிழ் மக்களின் விடயம் ஆராயப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. எனவே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இவ்வாறே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புறந்தள்ளி வந்துள்ளது. பிச்சைக்காரன் தனக்கு புண் இருப்பதை விரும்புவது போன்றுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடக்கூடாது என்பதில் அக்கறையாக இருந்து வருகின்றனர். எனவேதான் நாம் வலியுறுத்துகின்றோம் தமிழ் மக்களின் அரசியல் சிந்தனைகளில் மாற்றம் வேண்டும் என்பதை. தமிழ் மக்கள் புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை. அதன் மூலமே தமிழ் மக்கள் தங்களுக்கான ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் 'என வும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 24 பேர் கைது

(கல்பிட்டி)

கல்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 24 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி இவ்வாறு மீன்பிடிக்கப்பட்டுள்ளது.

கல்பிட்டிக்கு வடக்கே அமைந்துள்ள சிலாவத்துறை கடற்பரப்பில் வைத்து குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீன்பிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இரண்டு சுருக்கு வலைகள், கடலுக்குச் செல்ல பயன்படுத்திய ஐந்து படகுகள் போன்றனவற்றை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

சுருக்கு மற்றும் லைலா ரக வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதனால் பாரியளவில் கடலில் மீன் வளம் அழிவடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக குறித்த ரக வலைகள் பயன்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் ஒரு சிலருக்கு மட்டும் இந்த வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட அனுமதியளித்திருந்தது. எனினும் புதிய அரசாங்கம் இந்த வகை வலைகளை பயன்படுத்த முற்று முழுதாக தடை விதித்துள்ளது.

## ஓமந்தை சோதனை சாவடி காணியை கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

- அரசஅதிபரிடம் காணி உரிமையாளர்கள் கோரிக்கை -




ஓமந்தைப் பகுதியில் படையினரின் பயன்பாட்டிற்காக 1997 ஆம் ஆண்டு சுவீகரிக்கப்பட்ட 20 ஏக்கர் காணியையும் மீளக்கையளிக்க மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காணி உரிமையாளர்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டம் ஓமந்தைப் பகுதியில் கடந்த 1997 ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் இப்பகுதியில் வசித்த 14 குடும்பங்களிற்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலப்பகுதி வவுனியா, மன்னார் மாவட்ட முன்னாள் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் ந.திருஞானசம்பந்தரின் அறிவித்தலின் பெயரில் சுவீகரிக்கப்பட்டதாக அறிவித்தல் விடப்பட்டது.

இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட இக்காணிகளை உரிமை கோர எவரும் இல்லையென்வும் விபரிக்கப்பட்டிருந்ததோடு இக்காணி தேவைப்படுவதற்கான காரணமாக உள்நுழைவு வெளியகல்வு நிலையம் அமைப்பு எனக் கூறப்பட்டிருந்தது.

இருப்பினும் இதில் குறிப்பிடப்பட்டது போன்று இக் காணியின் உரிமையாளர்கள் இல்லையென்பது தவறு எனவும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்த போதும் குறித்த 14 குடும்பங்களிடமும் இந்த நிலங்களின் அனுமதிப்பத்திரமும் உள்ளமையினால் இந்நிலங்களை மீட்டுத்தருமாறு கடந்த 2013 ஆம் ஆண்டு கோரிக்கை விடப்பட்டிருந்தது. எனினும் எதுவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது ஓமந்தை சோதனைச்சாவடியின் நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் அதனை முழுமையாகவோ பகுதி அளவிலோ விடுவித்து அப்பிரதேச மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் உதவ மாவட்ட அரச அதிபரும் பிரதேச செயலாளரும் ஆக்கபூர்வமான நடவடிக்கையெடுக்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வாகன தவணைப்பணம் கட்டாதவர் தீக்குளிப்பு

அம்பாறையில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் நேற்றுமுன்தினம் தனக்கு தானே தீ வைத்துக் கொண்ட நபர், வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்று அதிகாலை உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர் கொள்வனவு செய்த வாகனம் ஒன்றுக்கு தவணைக் கட்டணம் செலுத்தாததால் நிறுவனத்தால் மீள பெற்றுக் கொள்ளவிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இவ்வாறு தீ வைத்துக் கொண்டார்.

மேலும் அவர் அம்பாறை பகுதியில் வசிக்கும் 40 வயதுடைய நபர் என தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 16 வயதுச்சிறுமியை மணம் முடித்தவருக்கு மறியல்

பருத்தித்துறை பகுதியை சேர்ந்த 16 வயதுச் சிறுமியை திருமணம் செய்த 20 வயது டைய சந்தேகநபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்ற நீதவான் கறுப்பையா ஜீவராணி கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

சிறுமியை காதலித்ததாக கூறப்படும் இவ் இளைஞன் அவரைக் கடத்திச்சென்று திருமணம் செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுமியின் பெற்றோர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபரான இளைஞனை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்த பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினார்கள்.

## தீப்பற்றி எரிந்தது பலசரக்கு கடை

மீசாலை சந்தியில் அமைந்துள்ள பலசரக்குக் கடையொன்று நேற்று அதிகாலை தீப் பற்றி எரிந்துள்ளது.

கடையிலிருந்த 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயால் எரிந்து நாசமடைந்துள்ளன.

அதிகாலை 12.30 மணியளவில் சீற்கள் உடையும் சத்தம் கேட்டு அருகிலுள்ள வீடுகளிலுள்ளோர் வெளியில் வந்த பார்த்தபோது, கடை தீப்பிடித்து எரிந்ததைக் கண்டுள்ளனர்.

உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, தீயணைப்புப் பிரிவினர் அவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டு ஏனைய கடைகளுக்கும் பரவாமல் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர். (11)

## மாணவர்களுக்கு லேகியம் விற்றவர் கைது

பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் கலந்த லேகியம் விற்ற தாவடியைச் சேர்ந்த 54 வயதுடைய நபரை கடந்த திங்கட்கிழமை கைது செய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்துக்கு சென்ற பொலிஸார் மேற்படி நபரை கைதுசெய்ததுடன் அவரிடமிருந்து 18 லேகியங்களை கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர்.

## சண்முகானந்தா வித்தியாலய மைதானம் புனரமைப்பு



வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்தின் மைதானம் நேற்றுமுன்தினம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.சசிகுமாரி வேண்டுகோளுக்கு இணங்க தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் அமெரிக்க கிளையின் நிதியுதவியுடன் பாடசாலை மைதானம் புனரமைப்பு செய்யப்பட்டது.

இந்தப் பாடசாலை மாணவர்களினதும், பாடசாலை பௌதீக வளங்களின் அபிவிருத்திக்கும் கிராமத்தின் வளர்ச்சிக்கும் புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் தங்களாலான உதவிகளை நேரடியாகவோ அல்லது கழகத்தின் ஊடாகவோ உதவ முன்வரவேண்டும் என தமிழ்த் தேசிய இளைஞர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

26. அதிக தூரம் சென்றவர் யார்? ..............................

27. இம் மாணவிகளுள் குறைவான தடவைகள் திரும்பிச் சென்ற மாணவி யார்? ..............................

28. எழுபத்தைந்தாவது ஆண்டு எடுக்கப்படும் விழா ..............................

பின்வரும் பாடலை வாசிக்க

நல்ல நல்ல மரங்கள்
நாம் வளர்க்கும் மரங்கள்
தின்ன இனிய கனிகள்
தினமும் எமக்குத் தருமே

நீண்டு வளரும் தென்னை
நிழல் தருமாம் ஆல்பார்
ஆண்டு வளரும் பனையும்
ஆன பலன்கள் தருமாம்

மாவும் பலாவும் வாழை
யாவும் தரும் முக்கனிகள்
தாவும் செடிகள் சூழ
தளிர்த்து வளரும் மரங்கள்

29. 'நல்ல' என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக? ..............................

30. 'கனிகள்' என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக? ..............................

31. 'ஆன பலன்கள் தருமே' என்ற வசனத்தில் அடங்கும் பனையின் பயன் ஒன்று எழுதுக? ..............................

32. 'இனியகனிகள்' என்பதிலுள்ள அடைமொழியை எழுதுக? ..............................

33. பாடலில் வந்த படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக? ..............................

34. மா, பலா, வாழை என்பதற்குப் பதிலாக எழுதக்கூடிய ஒரு சொல்லை எழுதுக? ..............................

35. "நாம் வளர்க்கும் மரங்கள்" என்ற வாக்கியத்தை ஒருமையில் எழுதுக? ..............................

36. பாடலில் வந்துள்ள பெயரெச்சம் ஒன்று எழுதுக? ..............................

37. பாடலில் கூறப்பட்டுள்ள மரங்கள் இரண்டு தருக? ..............................

38. பாடலில் வந்துள்ள ஒத்தஓசைச் சொற்கள் இரண்டு தருக? ..............................

சொற்களை ஒழுங்காக்கிக் கருத்துள்ள வாக்கியங்கள் அமைக்குக

39. அவற்றைப் / நினைத்தது / நரி / சாப்பிட / பிடித்தச்

..............................

40. உங்களது / வாழும் / தூய்மையாக / வீட்டையும் / நீர்கள் / சூழலையும் / வைத்திருங்கள்

..............................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. வியாழன் 2. புதன் 3. 10 4. செவ்வாய்,வெள்ளி 5. 270 6. 34kg 500g
7. 1500 8. 1 9. 2400ரூபா 10. ரூ.17.25சதம் (02).11. 74 12. 82 13. லொறி
14. துவிச்சக்கரவண்டி 15. பஸ் 16. 7 (03).17. 40kg 475g (04).18. 3l 950ml
(05).19. 208 20. 1143 (06).21. 450ரூபா 22. 20ரூபா 23. 25 24. 8 25. 4L (07).26. 111
27. 7 28. 37 29. 750ரூபா 30. 8500ml 31. $1\frac{1}{2}$ மணித்தியாலம் 32. $10\frac{1}{2}$ மணித்தியாலம்
(08).33.2 34. 50தடவை 35. 2m 80cm
36. 12ரூபா 37. 2 38. 10m 39. 400m (09).40. 128 41. 64 42. 1024
(10).43.108000ரூபா 44. 3 45. 196kg 100g 46. 30 47. 6

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு




எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்று கட்டத்திட்டமிடப்பட்டது.


| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | நான்கு ஆண்டுகள் |
| 3 | படிமுறை ஒன்றின் 1 மடங்கு |
| 3 | படிமுறை 1இன் 1 / 2 மடங்கு |

01. கட்டடம் 2006ஆம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்டது. இக் கட்டடத்தின் இரண்டாவது படிமுறை எத்தனையாம் ஆண்டு நிறைவு பெறும்
(1) 2018
(2) 2020
(3) 2014

02. பின்வரும் உருவை அவதானித்து வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



03. உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித்துண்டை சரியாக வெட்டவேண்டிய விதத்தை தெரிவு செய்க.



பின்வரும் கோட்டுப்படங்களின் உதவியுடன் 04ஆம், 05ஆம் வினாக்களுக்கு விடை தருக

| | |
|---|---|
| பென்சில் 1<br>பேனா 1<br>அடிமட்டம் 1 | ரூபா<br>35 / = |

| | |
|---|---|
| பென்சில் 2<br>பேனா 2<br>அடிமட்டம் 1 | ரூபா<br>60 / = |

| | |
|---|---|
| புத்தகம் 1<br>அடிமட்டம் 1 | ரூபா<br>40 / = |

04. இரண்டு புத்தகங்களின் விலை யாது?
01. ரூபா 60 02. ரூபா 30 03. ரூபா 20

05. ஒரு பென்சிலினதும் பேனாவினதும் விலை யாது?
01. ரூபா 12.50 02. ரூபா 25.00 03. ரூபா 10.00

வாணி பெண்பிள்ளை, வாணியின் அண்ணாவிற்கு மூன்று பெண் சகோதரிகளும் இரண்டு ஆண் சகோதரர்களும் உள்ளனர்.

06. வாணிக்கு எத்தனை பெண் சகோதரிகள் உள்ளனர்?
01. 1 02. 3 03. 2

07. வாணிக்கு எத்தனை ஆண் சகோதரர்கள் உள்ளனர்?
01. 1 02. 3 03. 4

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்காக யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட தள உருக்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன

குறைவு ▷ கூட | வட்டம் ▷ சதுரம்
கூட ◁ குறைய | வட்டம் ◁ முக்கோணம்

08. இதற்கேற்ப தள உருக்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளது?
01. வட்டம் 02. முக்கோணம் 03. சதுரம்


09. இத்தள உருக்களை கூடியதில் இருந்து குறைந்தது வரை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை
01. வட்டம், சதுரம், முக்கோணம்
02. சதுரம், வட்டம், முக்கோணம்
03. முக்கோணம், சதுரம், வட்டம்

10. மதுவுக்கு ஒவ்வொரு சனியும், ஞாயிறும் லீவு கிடைக்கும். ரகுவுக்கு ஒன்றவிட்ட ஒரு நாள் லீவு கிடைக்கும். இன்று சனிக்கிழமை இருவருக்கும் லீவு கிடைத்துள்ளது எனின், பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியானது
01. அடுத்த ஞாயிறு இருவருக்கும் லீவு கிடைக்கும்
02. அடுத்த சனி இருவருக்கும் லீவு கிடைக்கும்
03. இன்னும் ஏழு நாட்களில் இருவருக்கும் லீவு கிடைக்கும்

11. ஐந்து மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு ஐந்து மணித்தியாலங்கள் நடந்து 25km தூரம் சென்றனர். எனின், ஒரு மணித்தியாலயத்தில் ஒரு மனிதன் சென்ற தூரம் எவ்வளவு?
01. 5km 02. 4km 03. 1km

12. 8m நீளமுள்ள 1m உயரமும் உள்ள ஒரு சுவருக்கு பூச 1லீற்றர் பூச்சு தேவைப்படுகிறது. எனின், 4m நீளமும் 4m அகலமும் உள்ள ஒரு சுவருக்கு பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவை?
01. 8லீற்றர் 02. 4லீற்றர் 03. 2லீற்றர்

13. முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காணபடுகிறது. இக் கடிகாரத்தின் உண்மை நேரம் என்ன?
01. 2.55 02. 3.05
03. 9.05



பின்வரும் உரையாடலை வாசிக்க

மாணவர் A :- 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது தெரியுமா?
மாணவர் B :- தெரியுமே, சீனாவில் தான்.
மாணவர் E :- சீனா ஒலிம்பிக் போட்டிகளைப் பார்த்து உலகமே வியந்து போய் விட்டதாம்
மாணவர் C :- என்ன காரணம்
மாணவர் D :- சீனர்கள் நவீன முறையில் வடிவமைத்த மைதானங்கள் தான்
மாணவர் A :- இல்லை, சீனர்களின் கடுமையான உழைப்புத்தான்
மாணவர் C :- சீனாவின் நவீன தொழில்நுட்பவளர்ச்சியும் ஒரு காரணந்தான்

14. இவ் உரையாடலில் எத்தனை மாணவர்கள் பங்குபற்றி உள்ளனர்?
01. நான்கு 02. ஏழு 03. ஐந்து

15. இவ் உரையாடல் எக் கருப்பொருளை மையமாக கொண்டு இடம்பெற்றுள்ளது
01. ஒலிம்பிக்போட்டிகள் 02. நவீனதொழில்நுட்பம் 03. சீனர்களின் உழைப்பு

பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 16ஆம், 17ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக
மீனினம் ஒடிப்பறக்குதம்மா - ஊடே
(சூரியன் குறியீடு) ஓடமொன்று செல்லுதம்மா
வானம் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் ☆

16. (சூரியன் குறியீடு) என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்
01. வெள்ளி
02. பொன்
03. தங்கம்



17. ☆ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்
01. நனையுதம்மா 02. பொங்குதம்மா 03. முழுகுதம்மா

18. முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் நின்ற குழந்தை தன் உருவைப் பார்த்து கூறிய கூற்றுக்களில் சரியான கூற்று
01. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் சகோதரனாவார்
02. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் மூத்தமகன் ஆவார்
03. எனது தாயாரின் தங்கையாவார்

19 - 28 வரையுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

(குகை, பாக்கு, கைக்கடிகாரம், சோபா, யசோ, மதிய)


அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புக

19. மதிர யசோ சோபா .............. .................. ..................


20. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப்புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவிக்கூற்றுக்களை பயன்படுத்துக

இடமிருந்து வலமாக
1) நட்சத்திரத்தை இப்படியும் அழைப்பர்
2) சிங்கத்தின் உறைவிடம்
3) இது ஒரு மாதத்தின் பெயர்

மேலிருந்து கீழ்
1) இரவில் ஒளி தருவது
2) புறாவைக் காத்த அரசன்




21. 21ஆம், 22ஆம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் நிறைகளின் மொத்தத்தை அவதானிக்க. மூன்றாம் தராசில் உள்ள பொருள்களின் நிறை எத்தனை கிலோகிராம்




22. இடைவெளி நிரப்புக
அப் பெரிய மரத்தின் கி ...... கள், கு ........ ர், நி ....... ....... ப் பரப்பின


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | ச | ஞ | ட | க | ற் | ப | ச | ட |
| க | ந | த | க | வ | த | க | ம | ய |

23. இங்கு அதிக தடவை குறிக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்து யாது? ..............................



24. இங்கு அதிக தடவை வந்துள்ள வடிவம் யாது? ..............................

ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன




25. எழுத்து W இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது? ..............................

# ஐ.நா. விசாரணை அறிக்கையை தாமதமின்றி வெளியிட வேண்டும்

## வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றிய அறிக்கையில் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கையைத் தாமதமின்றி வெளியிடக் கோரியுள்ள வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் இக்காலதாமத அங்கீகரிப்பை மேற்கொண்ட அனைவரையும் கண்டித்துள்ளது.

இது சம்பந்தமாக வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை போர்க்குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கையினை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள ஆறு மாத காலதாமதம். போரினால் இன்னல்கள், இழப்புக்கள் சந்தித்து வேதனையுடன் அவல வாழ்க்கை வாழும் அனைவருக்கும் சொல்லெணா வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவ் அறிக்கையினை காலதாமதமின்றி வெளியிடவேண்டும் இக் காலதாமத அங்கீகரிப்பை மேற்கொண்ட அனைவரையும் வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் கடுமையாகக் கண்டிக்கின்றது.

திருவிவிலியத்தின்படி ஆபேலை கொலை செய்த காயீனை கடவுள் நீதி கேட்டார். உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கி கதறிக் கொண்டிருக்கின்றது.

(தொடக்க நூல் 4:10)

என்றார் கடவுளின் குரலுடன் இணைந்து நாமும் நீதி கேட்கிறோம்.

புதிய அரசு முன்வைக்கும் உள்ளக பொறிமுறை மூலம் நீதி கிடைக்கப் போவதில்லை என்பது எமது இலங்கை நாட்டின் வரலாறு ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவினரின் இலங்கை வந்து நேரடியாக விசாரணைகளை முன்னெடுக்கும்படி, கொலையுண்ட பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் பெயரால் வேண்டுகோள் விடுக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அவசர கலந்துரையாடல் நாளை

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டும் எரிபொருடகளின் விலைகள் குறைக்கப்பட்டும் புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்திருந்த போதும் இதன் பயன்கள் சாதாரண மக்களை சென்றடையாமை பற்றியும் குறிப்பாக ஹோட்டல் உரிமையாளர்களில் சிலர் இன்னும் பழைய விலைகளிலேயே உணவு வகைகளை விற்பனை செய்து வருவதாகவும் பலரும் தமது கவலைகளை யாழ். வணிகர் கழகத்திற்கு தெரியப்படுத்தி வருகின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் சிறந்தொரு புரிந்துணர்வு நிலைமைக்கு இட்டுச் செல்லும் நோக்குடன் யாழ். வணிகர் கழகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைநதுள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் அவசர கலந்துரையாடலுக்கு அழைப்பதென தீர்மானித்துள்ளது. எனவே இக் கலந்துரையாடலில் அனைத்து ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் ஹோட்டல் வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் போன்ற அனைத்து தரப்பினரையும் பங்குபற்றுமாறு யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் இ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.



யுஎஸ் எயிட் நிறுவனத்தின் யாழ். அச்சக உரிமையாளர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் கண்டியில் 3 நாள் பயிற்சி வழங்கப்பட்டது. ஓய்வுநேர சுற்றுலாவின்போது.... (90)

# பிறையில் முறையியல் நூல் வெளியீட்டு விழா

பிறையில் முறையியல் நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதி துங்க அத்தியட்சகர் செ.சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி சி.யமுனா நந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நூலின் நூலாசிரியர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் விசேட கல்வி ஆசிரியர் வி.விஸ்ணுகரன் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# மாண்பு மிக்க வாழ்வருளும் மாசிமகம் இன்று...



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமானுடைய விரதங்களில் மாசி மகம் தனித்துவமானது. வருடந்தோறும் மாசி மாதத்திலே வருகின்ற வளர்பிறை மக நட்சத்திரத்தன்று இந்த விரதம் சைவ மக்களால் பெரிதும் விரும்பி அனுஷ்டிக்கப்படுகின்றது.

பரங்கருணைத் தடங்கடலாக விளங்கும் பரமசிவனுடைய திவ்ய திருவருளைப் பெற இந்த மாசி மகம் உகந்த திருநாளாகக் கருதப்படுகின்றது. இலங்கையிலே மட்டக்களப்பிலே இன்றைய தினம் மகாமகம் என்று சொல்லப்படுகின்ற மாமாங்கத் தீர்த்தம் என்று ஒன்று உள்ளது. இதில் நீராடுகின்ற அடியார்கள் ஈர ஆடையுடன் பெருமானை மும்முறை வலம் வந்து வேண்டுதல் செய்து நேர்த்திகள் வைததால் அவையெல்லாம் மங்களகரமான நிறைவுக்கு வந்து பூர்த்தியாகும் என்று நம்பப்படுகிறது.

இந்தியாவிலே கும்பகோணத்திலே இன்றைய மாசிமக விரதம் வெகு சிறப்பாக நல்ல முறையில் அனுஷ்டிக்கப்படுகிறது. 'கும்பமேளா' என்று பெருவிழாவே நடைபெறும்.

இன்றைய மாசிமக நன்னாள் பற்றி ஓரு புராணக்கதையும் வழக்கிலிருக்கின்றது. முன்னொரு காலத்திலே மழைக்கு அதி தேவதையாக விளங்குகின்ற வருண பகவானை பிரம்மஹத்திதோஷம் பீடித்துக்கொண்டதாம். அது அவரைக் கொண்டு போய் சமுத்திரத்தின் அடியில் கட்டி வைத்திருந்தது. இது பற்றி அறிந்த தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர்.

விடயமறிந்த சிவபெருமான் விடைமேலேறி வந்து சமுத்திரத்திலே கட்டுண்டிருந்த வருண பகவானின் கட்டை அறுத்தருளினார். அவ்வாறு சிவன் கட்டறுத்த நாள்தான் இன்றைய மாசிமகம். பிரம்மஹத்தி தோஷத்தினின்றும் விடுபட்ட வருண பகவான் சிவபெருமானை வணங்கி வாழ்த்தித் துரததி மனமுருகி நின்றார். பிறகு சிவபெருமானைப் பார்த்து "ஐயனே! அடியேனுடைய விண்ணப்பம் ஒன்று உள்ளது. எனக்கு இன்று விடுதலை கிடைத்தது போல் இந்த மாசிமக நன்னாளிலே ஆறு, நதி, தடாகம், நீர் நிலைகளில் நீராடி உம்மை வழிபாடியற்றுவோரெல்லாம் பாசத் தளைகளை அறுத்து நிறுவிய இந்த நல்ல நாளில் நல்ல நிலையெய்தி சுகமே வாழ வகை செய்யவேண்டும். இதுவே என் தலையாய ஒரு விண்ணப்பம் என்று சொல்லிக் கூனிக்குறுகி நின்றார்.

வருண பகவானுடைய விண்ணப்பத்தைக் கேட்ட சிவபெருமான் திருவுளமிரங்கி "அவ்வண்ணமே ஆகட்டும்" என்று திருவாய் மலந்தருளினார். அது முதலாக மாசிமக நன்னாளில் நதி, ஆறு போன்ற புண்ணிய நீர் நிலைகளில் நீராடி இறைவனை வழிபடுபவர்கள் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவர் என்பது திண்ணமாயிற்று.

'பிரகஸ்பதி' எனப்படுகின்ற வியாழபகவான் மக நட்சத்திரத்துடன் கூடி கும்பராசிக்குச் செல்லும் போது "மகாமகம்" எனப்படும் புனித புண்ணியகாலம் ஏற்படும். மகாமகம் என்பது "மாமாங்கம்" என்று மருவி இப்பொழுதும் மட்டக்களப்பிலே பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இன்றைய "மகாமகம்" என்ற மாசிமகம் மிகச் சிறந்த ஒரு விரத நன்னாளாகும். எமது பிறவிப்பிணி தீரவேண்டுமாயின் மாசிமக விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

இன்றைய "மாசிகம்" என்ற விரதத்தை அனுட்டித்தால் புத்திரபாக்கியம் கிட்டுமாம். விரதம் நோற்பதாயின் இன்று காலையில் ஏதாவது ஒரு புனித புண்ணிய நதியில் நீராடி, சந்தியாவர்தனம் முடித்து சிவாலய தரிசனம் செய்வது உத்தமம். மதியம் ஒரு பொழுது மாத்திரம் உணவு உட்கொள்ளலாம். இரவு உபவாசமிருந்து சதா சிவசிந்தனையுடன் காலங்கழித்து உறக்கம் முடித்து நாளையதினம் ஒரு சிவனடியாருக்கு அன்னதானம் செய்ய வேண்டும். இது தொன்றுதொட்டு நிலவி வரும் பெருவழக்கமாறும்.

ஆகவே, இன்றைய மாசிமக விரதத்தை முறைப்படி அனுட்டித்து உலக வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்று வாழ்வாங்கு வாழ நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

*கலாபூஷணம்*
*இராசையா ஸ்ரீதரன்*

# கிராம அலுவலர் நியமனம்

கிளிநொச்சி தொண்டமான் நகர்ப் பகுதிக்கு புதிய கிராம அலுவலர் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பகுதிக்கு தற்காலிகமாக கடமையில் ஈடுபட்டிருந்த அலுவலர்கள் நிறுத்தப்பட்டு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நிரந்தர கிராம அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கணேஸ் விஜிதா என்ற கிராம அலுவலரே கே.என். 17 தொண்டமான் நகர்ப்பகுதிக்கு நிரந்தர கிராம அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (77)

## வாழ்க வளமுடன்

பெயர் : றெ.கியாகன்
முகவரி: வட்டுவாகல், முல்லைத்தீவு.



அகவை 7 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

**உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்டவராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.**

சிறாரின் பெயர் :- ..................................

முகவரி :- ..................................

பிறந்த ஆண்டு :- ..................................

..................................
பெற்றோர் கையொப்பம்

## ஐ.எஸ்.ஐ.எஸ்.வசமிருந்த சில பகுதிகளை கைப்பற்றியது ஈராக் அரச படைகள்



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமிருந்த சில பகுதிகளை தாம் கைப்பற்றியுள்ளதாக ஈராக் அரச படையினர் தெரிவித்துள்ளனர்.

மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மோதல் நடவடிக்கையின் அடிப்படையில் மீண்டும் அந்த பகுதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் 30 ஆயிரம் துருப்பினரும், தீவிரவாதிகளும், பல முனைகளில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஈராக்கின் ஜெட் யுத்த வானூர்திகளும் பெருவாரியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஈரானின் கட்டளைத் தளபதியும் இந்த மோதல்களின் போது பங்களிப்பு செலுத்தியதாக ஷியா மிலிட்டியா போராளிகளின் கட்டளைத் தளபதி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

பாக்தாத்தின் வடக்கில் அமைந்துள்ள டிக்ரிட் மாகாணம் கடந்த வருடம் ஜுன் மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் வசமானமை குறிப்பிடத்தக்கது.



# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## VACANCIES

Applications will be received by me up to 2nd April 2015 from suitably qualified candidates for the following posts;

**01) Post-TECHNICAL OFFICER GRADE II SEGr.B (TRAINEE)** (Vacancies exist at the University of Jaffna including Killinochchi premises and Vavuniya Campus of the University of Jaffna)

**QUALIFICATIONS;**

I. (a) Three (03) G.C.E (Advance Level) Passes in Science subjects in one sitting subject combination (s) to be decided by the faculty concerned upon the recommendation of the Department.

AND

(b) Passed a skill oriented formal programme of training relevant to the post of at least one year (Full time) duration or equivalent. The acceptability of the training programme for this purpose shall be judged by the faculty concerned.

**AND**

II. Age Limit: Not more than 35 years

Salary Scale:U-MTI (IIIA) 16, 535-7X155; 10X185-19,470 P.M

Sclection:By Practical Test and Interview

**2. LABORATORY ATTENDANT (LOWER GRADE)**

**Qualifications:**

I.Pass in the 8th Standard

II.Knowledge of Laboratory equipment, apparatus and chemicals of common use.

III. Age limit:Not more than 45 years

Salary Scale:U-PL2 (III) Rs. 14.670-16+140-16,910P.M

Scicetion: By Aptitude test and Interview

Age Limit for the above posts is not applicable for applicants in the Government Departments/ State Corporation and Statutory bodies.

**STATUTORY BENEFITS;**

1. Allowance approved by the university Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity Payments.
4. EmploymentTrust Fund Benefits.
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic) University o Jaffna. Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs. 100/- per application form.

Those who wish to obtain application forms by post, are requested to send a Money Order/ postal Order drawn in favour of **"Bursar, University of Jaffna, 'Thirunelvely, Jaffna"** together with a self addressed Rs 10.00 stamped ell envelope of 23X 10 cm .in size.

Application forms and other details will also be available in the University website www.jtn.ac.lk Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal order RS. 100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 02.04.2015.

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible acid incomplete applications will be rejected without intimation.

Those who are in public Service/ Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/ Boards. Advance copies of applications may be sent in the first instance, Howevor no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

**Registrar 02.03.2015** (C/3827)



# மோடியை எதிர்த்து சகோதரர் போராட்டம்

## மும்பையில் பரபரப்பு



பிரதமர் மோடியின் அரசை எதிர்த்து நியாய விலைக்கடைக்காரர்களின் கோரிக்கைகளுக்காக அவரது சகோதரர் போராட்டம் நடத்தியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் மோடியின் மூத்த சகோதரரான பிரகலாத் மோடி, அகில இந்திய நியாய விலைக் கடை விநியோகஸ்தர்கள் சங்க துணைத் தலைவராக உள்ளார்.

இந்நிலையில் நியாய விலைக கடைகாரர்களின் கோரிக்கைக்காக வியாபாரிகளை திரட்டிய இவர் மும்பை ஆசாத் மைதானத்தில் மிகப்பெரிய போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

அந்த போராட்டத்தின்போது பேசிய பிரகலாத் மோடி, நியாய விலை கடை விநியோகஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 1,000 கார்டுதாரர்களை ஒதுக்க வேண்டும் என்றும், தரகுப் பணத்தை உயர்த்தி வழங்க வேணடும் என்றும் கோரிக்கை விடுத்தோம்.

எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்த அரசு, இதுவரை நிறைவேற்றவில்லை.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் போது 75,000 நியாயவிலை கடை விநியோகஸ்தர்கள் உத்தரப் பிரதேச மாநிலத்தில் பா.ஜ.க வெற்றிக்காக பணி புரிந்ததால் மொத்தம் உள்ள 80 தொகுதிகளில் 73 இடங்களை கைப்பற்றியது.

ஆனால், டில்லி சட்டசபை தேர்தலில் பா.ஜ.க-வை எதிர்த்து நாங்கள் வேலை செய்ததால் கட்சி படுதோல்வி அடைந்தது.

மத்திய அரசு எங்கள் கோரிக்கைகளை இனியும் நிறைவேற்ற தவறினால் வர இருக்கும் உத்தரப்பிரதேசம், பீகார் மாநில சட்டசபை தேர்தல்களில் பா.ஜ.க தோல்வியை தழுவும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அரச அதிகாரிகள் பற்றிப்பேசுகையில், அவர்கள் பெரிய திருடர்கள், கடைக்காரர்களாகிய நாங்கள் சிறிய திருடர்கள் என்றும் அவர்களது கொள்கைகள் தான் எங்களை திருடர்களாக மாற்றுகிறது எனவும் ஆவேசமாக பேசியுள்ளார்.

## வயிறு ஒட்டிப்பிறந்த குழந்தைகளின் சத்திரசிகிச்சை வெற்றியில் முடிவு



வயிறு ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை சவுதி மருத்துவர்கள் அறுவை சிகிச்சையின் மூலம் வெற்றிகரமாகப் பிரித்துள்ளனர்.

ஏமன் நாட்டை சேர்ந்த தம்பதியினருக்கு சில மாதங்களுக்கு முன் வயிறு ஒட்டியபடி இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

அப்துல்லா, அப்துல் ரகுமான் என்று பெயரிடப்பட்ட அந்த இரட்டை ஆண் குழந்தைகளை அறுவைச சிகிச்சை மூலம் பிரிப்பதற்காக, அவர்களின் பெற்றோர் சவுதிக்கு அழைத்து வந்துள்ளனர்.

இதன்பின் அந்நாட்டு சுகாதார அமைச்சர் அப்துல்லா-அல்-ரபியாவின் வழிகாட்டுதலின் படி, தலைநகர் ரியாத்தில் உள்ள கிங் அப்துல் அசீஸ் என்ற மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சுமார் 9 மணி நேரமாக நடந்த இந்த அறுவைச் சிகிச்சையில், குழந்தைகளின் ஒட்டியிருந்த வயிறுகள், சிறுநீரக அமைப்புகள் மற்றும் இடுப்பு எலும்புகள் மிக கவனமாக பிரிக்கப்பட்டுள்ளன.

மேலும் வெற்றிகரமாக பிரிககப்பட்ட குழந்தைகள் இருவரும், தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆம் ஆத்மி கட்சிக்குள் பாகுபாடு குழப்பத்தில் அரவிந்த் கெஜ்ரிவால்



ஆம் ஆத்மி கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளால் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருப்பதாக அக்கட்சி தேசிய ஒருங்கிணைப்பாளரும், டில்லி முதல்வருமான அர்விந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் அவர் குறிப்பிடும்போது, "கட்சிக்குள் நடைபெறும் விவகாரங்களால் ஆழ்ந்த வேதனையில் இருக்கிறேன். இத்தகைய சர்ச்சைகளைப் பெரிதாக்குவது தேர்தலில் நம்மை வெற்றி பெறச் செய்த டில்லி மகளுக்கு நாம் செய்யும் துரோகமாகும். இந்த கேவலமான சர்ச்சைக்குள் சிக்க நான் விரும்பவில்லை. என் முழு கவனமும் டில்லி மாநில நிர்வாகத்திலேயே இருக்கும்" என்று கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.


ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ள நிலையில், தேசிய ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்து டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலை நீக்க சதி நடந்து வருவதாக அதன் செய்தித் தொடர்பாளர் முன்தினம் குற்றம்சாட்டியுள்ளார். கட்சியை பலவீனப்படுத்தி, யோகேந்திர யாதவை தலைவராக்குவதற்காக பிரசாந்த் பூஷண், அவரது தந்தை சாந்தி பூஷண் மற்றும் யோகேந்திர யாதவ் ஆகியோர் முயற்சிப்பதாக கெஜ்ரிவால் தரப்பு கூறுகிறது.

உலகச் செய்திகள்

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண

# 13ஆவது திருத்தம் அமுலாக வேண்டும்

## யாழ். வந்த ஜனாதிபதியிடம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் அரசியல் பிரச்சினை உட்பட அன்றாடப்பிரச்சினைகளை தீர்வு காணும் நோக்குடன் 16 அம்சக்கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். வடமாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கடந்த அரசிடம் முன்வைக்கப்பட்டு நிறைவேற் றப்படாத கோரிக்கைகளை புதிய அரசு முன்னெ டுக்க வேண்டுமென் பதை கோரி 16 அம்சங்கள் அடங்கிய கோரிக்கை மனுவை நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கையளித்தார்.

ஏற்கனவே இந்த மனு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன்விபரம் வருமாறு

• தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் செல்வதற்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் ஆரம்பித்து, அதற்கு மேலதிகமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும்.

• நீண்ட காலமாக விசாரணைகள் இன்றியும், குற்றங்கள் நிரூபிக்கப்படாமலும், புனர்வாழ்வு வழங்கப்பட்டும் சிறைகளில் வாடும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தல்.

• மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்பதே எமது நிலைப்பாடாகும். பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான அனைத்து நிலமும் உரியவர்களிடம் மீள ஒப் படைத்தல்.

• புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இலங்கைத் தாய் நாட்டினதும் பிரஜைகளாக இருப்பதற்கு இரட்டைக் குடியுரிமையை இலகு படுத்தல்.

• வடக்கு நோக்கிப் பயணம் செய்யும் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஓமந்தைச் சோதனைச் சாவடியை முற்றாக அகற்றல்.

• வெளி நாட்டவர்களும், வெளிநாடுகளில் வாழும் இலங்கை மக்களும் வட மாகாணம் நோக்கிப் பயணிப்பதை தடுக்கும் அல்லது நெருக்கடியை ஏற்படுத்தும் கடவுச்சீட்டு பரிசோதனை முறைமையை இரத்துச் செய்தல்.

• யுத்த சூழலால் பாதிக்கப்பட்டு, பொருளாதாரத்தில் நலிந்துபோன மக்களை தூக்கி நிமிர்த்த உதவியிருக்கும் சமுர்த்தி கொடுப்பனவைமேலும் அதி கரிப்பதுடன் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை யையும் அதிகரித் தல்.

• யுத்தத்திற்குப் பின்னர் சொந்த வாழ்விடம் திரும்பிய மக்களினதும், மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களினதும் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்த உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

• யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் வேலையற்று இருக்கும் எமது இளைஞர், யுவதிகளுக்கு தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்தல். சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு தொழில்வாய்ப்புக்களை மேலும் ஏற்படுத்துதல். சொந்தப் பொருளாதார வளர்ச்சியில் எமது மக்கள் வாழுவதற்கான சூழலை ஏற்படுத்தல்.

• எமது கடல் வளத்தை அழித்தும், சுரண்டியும் எமது கடற்தொழிலாளர்களது வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற, எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதோடு, எமது கடற்தொழிலை புனரமைப்புச் செய்து, நவீன மயப்படுத்தி எமது கடற்தொழிலாளர்களது வாழ்வை மேம்படுத்தல்.

• விவசாய, உள்ளூர் உற்பத்திகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றை ஊக்குவித்து, ஒவ்வொருவரும் சுய பொருளாதார வளர்ச்சியடைய நிதிவளம், உள்ளீடுகள் மற்றும் மூலப் பொருட்களை வழங்குதல்.

• நிலத்தடி நீர் மோசமாகப் பாதிப்படைந்துவரும் யாழ். மாவட்டம் உட்பட குடி நீருக்குப் பாரிய நெருக்கடியைச் சந்தித்துவரும் வட மாகாணத்தின் மக்கள் அனைவருக்கும் பொருத்தமான பொறிமுறை ஊடாக சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

• முன்னாள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட ஏனைய அமைப்புக்களின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் திட்டங்கள் தேவை.

• ஆட்சி உரிமை சட்ட திருத்தத்தை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் வட மாகாணத்தில் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை உள்ளது.

• பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி கட்டியெழுப்பப்பட வேண்டும். முன்னர் பலாலியிலிருந்து தென்னிந்தியாவிற்கு விமானப் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

• யுத்தத்தில் உறவுகளை இழந்தவர்களுக்கும் பூர்வீகச் சொத்துக்களை இழந்தவர்களுக்கும் பரம்பரைத் தொழில்களை இழந்தவர்களுக்கும் நஸ்டஈடுகளும் நிவாரணங்களும் வழங்கப்பட வேண்டும்.

### எல்லை...

மீன்பிடிச் செயற்பாடுகள் தடுத்து வருவதாகவும் சிலோன் ருடே ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

பெருமளவு விவசாய பொருளாதாரத்தை நம்பியுள்ள வடக்கு மாகாணம், 1977ஆம் ஆண்டு இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் மாமனாரான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள இந்த ஆசிரியர் தலையங்கம், மகாவலி கங்கைத் திட்டம் காரணமாக தென் பகுதி விவசாயம் வளர்ச்சியடைந்த காரணத்தினால், வடக்கு விவசாயப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பு தென்பகுதியில் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டதால் வடபகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டதாகவும் விபரித்துள்ளது.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்திலே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கையின் எதிர்க்கட்சியாக இருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலைமை ஏற்பட்டதாகவும், எனினும், 1977ஐத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட வன்முறைச் சூழல் வடக்கு மாகாணத்தை மோசமாகப் பாதித்த காரணத்தினால், வடக்கின் பொருளாதாரம் மேலும் பின்னடைவுகளைச் சந்தித்தது என்றும் 'சிலோன் டுடே' ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடுகிறது.

வடக்கில் தோன்றிய ஆயுதப் போராட்டச் சூழல் வளர்ச்சியடைவதற்கு இந்தியா பெருமளவு காரணமாக இருந்ததையும் சுட்டிக்காட்டியிருக்கும் சிலோன் டுடே ஆசிரியர் தலையங்கம், இன்று அதே இந்தியாவின் மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளால் தமது பொருளாதாரம் பாதிக்கப்படும் நிலையில், மீண்டும் ஆயுதமேந்திப் போராடும் துர்ப்பாக்கிய நிலைமை இலங்கையில் தோன்றலாம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே, இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பிரதி பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆகியோர் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், சிலோன் டுடே பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### வடக்கிற்கு..

மாகாணசபைகளுக்கு காணி, காவல்துறை அதிகாரங்களை வழங்கும், 13ஆவது திருத்தச்சட்டம் குறித்த கரிசனைகள் குறித்து தாம் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார். 1987ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமையவே, 13ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இரகசிய..

லான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படாதவர்கள் உயிரிழந்து விட்டதாகவோ அல்லது நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகவோ கருதப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பின் தெஹிவளை பிரதேசத்தில் காணாமல் போன இளைஞர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட் டுள்ளார்.

கடற்படை அதிகாரிகள் சிலர் வெள்ளைவானில் இளைஞர்களைக் கடத்திச் சென்றுள்ளதாகவும் இவ்வாறு கடத்தப்பட்ட சில இளைஞர்கள் திருகோணமலையின் கோத்தாபய என்னும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

### தப்பிப்பிழைத்து...

எனினும், இதுவரை கல்வி அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்த காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சுக்கள், வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு, ஆரியவதி கலப்பதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமை ஆரியவதி கலப்பதி கல்வி மற்றும் காணி அமைச்சராகவும், எம்.ஐ.எம். மன்சூர், வீதி அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்தனர்.

இதையடுத்து, தமக்கு கல்வி மற்றும் காணி அமைச்சுக்களை எதிர்பார்த்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அமைச்சரவையில் இணையும் முடிவை மறுபரிசீலனை செய்யும் நிலை ஏற்பட்டது.

அதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஆட்சியமைக்க ஆதரவளித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒன்பது உறுப்பினர்கள், முதலமைச்சர் ஹபீஸ் நசீர் முகமத் தலைமையிலான அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்திருந்தனர்.

இந்தநிலையில், கடந்த வெள்ளிக்கிழமை, கல்வியமைச்சராக நியமிக்கப்பட்ட, ஆரியவதி கலப்பதியிடம் இருந்து அந்த அமைச்சை மீளப்பெற்று, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் குழுத்தலைவர் தண்டாயுதபாணிக்கு வழங்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்தது.

இதையடுத்து, புதிய அமைச்சர்கள் நால்வரும் நேற்று பதவியேற்றுள்ளதுடன், எந்த நேரமும் கவிழலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட கிழக்கு மாகாணசபை அரசாங்கமும், ஆபத்தில் இருந்து தப்பியுள்ளது.

### பேச்சு..

யாழ். செயலகத்தில் நேற்று இடம் பெற்ற வடமாகாண ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் நிர்வாக கட்டமைப்புக்கான எனது உறுதிமொழிகளை நம்பியே மக்கள் வாக்களித்தனர். எனவே மக்களின் தேவைகளை நன்கறிந்தவன் என்ற வகையில் அவற்றை நிறைவு செய்வதுடன் வடக்கு தெற்கு, மக்களை மனங்களால் ஒன்றிணைப்பதற்கு அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் நிலவும் நீண்ட கால பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் இதற்கு இனங்களுக்கிடையே மனங்களை ஒன்றிணைக்கவேண்டும். இனம், மதம் எதுவுமின்றி மக்களை பாதுகாக்கவேண்டும் இதுவே எனது நோக்கம் முன்னர் வேட்பாளராக உங்கள் முன்வந்தேன் உங்களது பேராதரவுடன் ஜனாதிபதியாகவந்துள்ளேன் இதற்காக உங்களுக்கு நன்றிதெரிவிக்கின்றேன். பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாடாளுமன்றம், மாகாணசபை என்பன முக்கிய நிறுவனங்களாகின்றன. அரசு உங்களது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை ஒரு சிவில் ஆளுநரை மாற்றுமாறு கேட்டீர்கள், நானும் சொன்னேன் ஆனால் அது நடக்கவில்லை அதை எண்ணி இப்போது மகிழ்ச்சியடைகிறேன். அது நடக்காமையால் தான் நான் ஜனாதிபதியாக வெற்றிபெற்றேன்.

தற்போது அந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விட்டது. இங்கு உரையாற்றியவர்கள், கல்வி, சுகாதாரம், காணிப்பிரச்சினை பற்றி கூறியுள்ளனர். காணிப்பிரச்சினைக்கு தீர்வுகாண நாம் குறுகிய காலத்தில் நடவடிக்கை எடுத்துள்ளோம் அதற்கான பொறுப்பு அமைச்சர் சுவாமிநாதனிடம் வழங்கப்பட்டுள்ளது. அவர் சிறப்பாக செயற்படுகிறார் யுத்தத்தின் போது இராணுவத்தினால் பெறப்பட்ட காணிகள் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் உள்ளன. அவையும் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் விரைவில் தீர்வு பெறப்படும் இந்தியா சென்ற பொழுது இது குறித்து பேசினோம் அத்தோடு நாட்டில் நூற்றுக்கு ஆறு வீதமானவர்கள் வேலை இன்றி உள்ளன கடந்த 3 வருடகாலமாக பட்டதாரிகள் வேலை இன்றி உள்ளதை நான் அறிவேன் அதற்கும் மிக விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் நான் 5 வருடமாக சுகாதார அமைச்சரவையில் பணியாற்றிமையால் வைத்தியசாலைகளில் இருக்கும் பதவி வெற்றிடங்கள் குறித்து நான் அறிந்துள்ளேன் அதுமட்டுமல்ல வடக்கு விவசாயிகள் அனைத்து நாட்டுக்கும் உதாரணமானவர்கள் தேசிய வருமானத்திற்கு வடக்கு விவசாயிகள் பெரிதும் உழைக்கின்றனர். எனவே அவர்களின் பிரச்சினைக்கும் தீர்வை பெற்றுத்தருவதுடன் வடக்கிலுள்ள குடிநீர் பிரச்சினைக்கு வெளிநாட்டு நிதியுதவியுடன் மக்களுக்கான குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு விரைவில் காணப்படும்.

வடக்கு கிழக்கில் இடம் பெற்ற யுத்தத்தில் 80 ஆயிரம் விதவைகள் உள்ளனர். இவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த விசேட செயற்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. எமது நிறைவேற்றுக்குழுக்கூட்டம் வாரம்தோறும் இடம் பெறுகின்றது. இதில் சம்பந்தனும் கலந்து கொள்கிறார் இதன் போது 100 நாள் வேலைத் திட்டம் குறித்து கலந்துரையாடிவருகின்றோம். இதன்மூலம் நல்ல பலாபலன்களைப் பெறக்கூயதாக இருக்கும் எனவே எதிர்வரும் நாட்களில் எமது அமைச்சர்களை இப்பகுதிக்கு அடிக்கடி அனுப்பி வைத்து சேவையாற்றவுள்ளோம். இதற்கு அரசியல் தலைமைகள், மாகாணசபையினர் உள்ளூராட்சி சபையினர் என அனைவரும் இணைந்து அபிவிருத்தியை மேறகொள்ள வேண்டும். இங்குள்ள இரும்பும் மண்ணும் மக்களை ஒன்று சேர்க்கமுடியாது. வடக்கு, தெற்கு மக்களின் உள்ளங்கள் சேர நடவடிக்கை எடுப்பேன் அனைவரும் பயம், சந்தேகம், இல்லாது சகோதரர்களாக வாழவேணடும்.

(இ)

# காங்கேசனில் ஜனாதிபதி மாளிகை பார்வையிட்டார் மைத்திரி



(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, ஜனாதிபதியுடன் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வட மாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பளிஹக்கார, மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், காங்கேசன்துறையில் புதிதாக ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிடிபட்டது எதனோல்

(கொழும்பு)

தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 16,000 லீற்றர் எதனோலை தாம் கைப்பற்றியுள்ளனர் என்று சுங்கத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரத்மலானையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று கலசியம் கைபோகுளோரேட் என்று தவறான தகவலை வழங்கி எதனோலை இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ளது என்றும், இதன் பெறுமதி 1.6 மில்லியன் ரூபா என்றும், ஒருகொடவத்தை களஞ்சியசாலையில் இவை பதுக்கிவைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்த ஒருவரின் பெயரில் இவை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முன்னாள் புலி உறுப்பினர் கட்டுநாயக்கவில் கைது

கடற்புலிகளின் மகளிர் படையணியின் உயர்மட்ட தளபதியாக இருந்த ஒருவர் இன்று பிரான்ஸ் நாட்டுக்கு செல்லவிருந்த சமயம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

'முருகேசு பகீரதி' என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் 1997 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டுவரை கடற்புலிகளில் இருந்தார் என்றும், 2005 ஆம் ஆண்டு பிரான்ஸ்ஸுக்கு சென்ற இவர், கடந்தமாதம் இலங்கைக்கு திரும்பினார் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் ஒருவரின் தகவலின்படியே குறித்த பெண் கைது செய்யப்பட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# காணாமற் போனவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கடந்த 25ஆம் திகதி முதல் காணாமற்போனதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த யாழ்.மாலுசந்தி பகுதியை சேர்ந்த ஸ்ரீரங்கநாதன் மயூரன் (வயது 21) என்ற இளைஞனை திருட்டுக் குற்றச் சாட்டில் கைது செய்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.


இந்த இளைஞனைக் காணவில்லையென அவரது தாயார் கடந்த 26ஆம் திகதி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

குளிர்பான நிலையமொன்றுக்கு வேலைக்காக சென்ற மகன் வீடு திரும்பவில்லையென தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் திருட்டுக் குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட 7 சந்தேகநபர்களில் மேற்படி இளைஞனும் அடங்குவதாக கொடிகாமம் பொலிஸார் நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

# முகத்தை மறைக்கும் தலைக்கவசம் அணிவதை தடுப்பது தவறு

## விசித்திர விளக்கம் தருகிறது பொதுபலசேன



இந்த நாட்டில் இரண்டு சட்டங்கள் இருக்க முடியாது. முகத்தை மூடி ஹெல்மெட் அணியும் தடைச் சட்டத்தை நிராகரிக்குமாறு நாம் இந்நாட்டு இளைஞர்களைக் கேட்டுக் கொள்கின்றோம் என பொதுபல சேனவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இவ்வாறு கூறினார்.

முஸ்லிம் பெண்களுக்கு முகத்தை முடிக்கொண்டு செல்ல முடியுமாக இருந்தால், ஏன் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது முகத்தை மூட முடியாது என்று சட்டம் கொண்டு வருகின்றீர்கள். இந்த நாட்டில் சட்டம் என்றால் எல்லோருக்கும் ஒன்றாக இருக்க வேண்டும்.

முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடுவதைத் தடுக்கும் சட்டத்தையும் உடன் நடைமுறைப்படுத்துங்கள். இல்லாது போனால் நாமும் காவி உடை அணிந்து முகத்தை மூடிக்கொண்டு செல்ல ஆரம்பிப்போம். இது எமக்கு சிறந்த ஒரு சந்தர்ப்பம் எனவும் தேரர் மேலும் கூறினார்.

# அரசியலில் குதிக்கமாட்டேன் சங்கா உறுதி



(கொழும்பு)

வாழ்க்கையில் தற்போதும் எதிர்காலத்திலும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தான் அரசியலுக்கு வரப்போவதாக வெளியான செய்தியை நிராகரித்துள்ள சங்கக்கார, இது அடிப்படையற்றதும் பொறுப்பற்றதுமான செய்தி என குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் (facebook) சங்கக்கார இவ்வாறு அறிவித்துள்ளார்.

குமார் சங்கக்கார அரசியலுக்கு வரப்போவதாகவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாக்குறுதியை நிறைவேற்ற அரசு தவறக்கூடாது



(கொழும்பு)

அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை வருத்தமளிப்பதாக ராஜகிரியவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்ள மக்களை அணிதிரட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய அரசாங்கமொன்றை அமைத்து அரசியல் சாசனத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்குவதனைத் தவிர, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதாக இணங்கப்படவில்லை.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு பிரதமர் எதிர்ப்பை வெளியிடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி .....

## அரசியலில்..

இங்கே அதை எதிர்த்து கறுப்பு கொடிகள் பறக்கவிட்டு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒருகாலம் இருந்தது. ஆனாலும் கடந்த சில வருடங்களாக இந்த நிலை மாற்றப்பட்டு தென்னிலங்கையில் இருந்து வரும் அரசியல் தலைவர்களையும், அமைச்சர்களையும் நேசமுடன் வட பகுதி மக்கள் வரவேற்கும் காலம் நீடித்து வருகிறது. அதை இன்று மாற்றி அமைத்தவர்கள் நாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இதற்குகாரணம் தமிழ் பேசும் மக்கள் ஆட்சியாளர்களிடம் நியாயபூர்வமான ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறார்கள் என்பதேயாகும்.

தமிழ் பேசும் மக்கள் இன நல்லிணக்கத்தை விரும்புகிறார்கள்.

ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வு வாழவே விரும்புகிறார்கள்.

அரசியலில் சமவுரிமையும், அபிவிருத்தியில் சமத்துவமும் நிலவவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

அர்த்தமற்ற பகைமையை தவிர்த்து தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற அதே வேளை உறவுக்குகரம் கொடுக்கவும் விரும்புகிறார்கள்.

தமிழர்களாக வாழ வேண்டும் என்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தையோ, அன்றி இலங்கையர்களாக வாழவேண்டும் என்பதற்காக தமிழர்கள் என்ற அடையாளத் தையோ தமிழ் மக்கள் இழக்கவிரும்பவில்லை.

தமிழர்களாகவும், அதே வேளை இலங்கையர்களாகவுமே அவர்கள் வாழ விரும்புகிறார்கள்.

இதை ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன நன்குபுரிந்து கொண்டிருக்கிறார் என்றே நான் நம்புகின்றேன்.

தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் கடந்தகாலங்களில் விடப்பட்ட தவறுகளை சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருப்பினும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

சகதமிழ்கட்சிகள் தரப்பில் இருந்துதவறுகள் விடப்பட்டதாகசுயவிமர்சன அறிக்கைகள் மட்டும்தான்வெளியிடப்படுகின்றன.

ஆனாலும், தவறுகளை திருத்திக் கொண்டு செயற்படுவதற்கான ஆக்கபூர்வமான நடைமுறைகளைக் காணவில்லை.

கடந்தகாலங்களில் அரிய பலசந்தர்ப்பங்களை தவறவிடடிருக்கிறோம் என்றும், உசுப்பேற்றும் அரசியலுக்கு ஊடாக தீர்வுகாண முடியாதுஎன்றும், நடைமுறைசாத்தியமாக சிந்திக்கவேண்டும் என்றும் கூறுவதோடுமட்டும் நின்றுவிடாமல்,...

சகதமிழ் கட்சிகள் அதை நடைமுறைப்படுத்தவும் முன்வரவேண்டும் எனநான்நேசமுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

யுத்தத்தினால் பாதிக்கபட்டபிரதேசம் என்றவகையிலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குமுன் மாற்றான் தாய் மனப்பான்மை யோடும் அணுகப்பட்டதன் விளைவாகவும் வடமாகாண அபிவிருத்திக்காகஅதி கூடிய நிதிஒதுக்கீட்டை தொடர்ந்தும் வழங்கவேண்டும்.

கடந்தகாலஅரசுகளிடமும் நாம் இதையேவலியுறுத்தி நடைமுறைக்கு கொண்டுவந்திருந்தோம்.

ஆனாலும், வினைத்திறன் அற்றஅரசியல்வாதிகளினாலும், தீர்வுகாண் பதற்குவிருப்பமற்ற அவர்களது மனோநிலைகாரணமாகவும் கைக்குஎட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது.

13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் நடைமுறையில் முழுமையாக வழங்கப்படவில்லை என்றகுறைபாடு கூறப்படுகின்றது.

குறைபாடுகளை ஆராய்ந்து அவற்றினைமுழுமையாக வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, வடக்கு,கிழக்குமாகாணங்களுக்குமேலதிகவிஷேட அதிகாரங்களை வழங்குவது தொடர்பாகவும் பரிசீலிக்க வேண்டும் என ஜனாதிபதி அவர்களை வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

புதிய அரசாங்கத்தின் நூறுநாட்கள் வேலைத்திட்டத்திற்கு சகலகட்சிகளும் ஆதரவு வழங்கிவருகின்றன. இதைநாம் வரவேற்கின்றோம்.

அதுபோலவே அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் புதிய அரசாங்கத்திற்கு குறிப்பிட்டகால அவகாசம் வழங்கஅனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் எனநாம் பகிரங்கமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அரசியலுரிமை பிரச்சினைக்கானதிறவுகோல் என்பது இனங்களுக்கிடையிலான புரிந்துணர்விலும்,ஐக்கியத்திலுமே தங்கியுள்ளது.

ஆகவே இனப்பகைமையை வளர்த்துவிடுவதற்கு ஒப்பான பொறுப்பற்றசெயற்பாடுகளை சகதமிழ்க்கட்சித் தலைமைகளும், தென்னிலங்கை சில அரசியல் கட்சிகளும் தவிர்க்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.